பக்கங்கள்: 12+IV=பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 23 வெள்ளிக்கிழமை (10-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:316

## பிரிட்டிஷ் பாதுகாப்பு அக்கடமி அதிகாரிகள் குழு குடாநாட்டுக்கு வந்து நிலைமைகளை ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.10

பிரிட்டிஷ் தேசிய பாதுகாப்பு அக்கடமியைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தது.

அக்கடமியின் துணைவேந்தர் லெப்.கேணல் சேர் கிறிஸ்ரோபர் வலஸ் தலைமையில் விரிவுரையாளர்கள் மற்றும் பிரிட்டிஷ் கவுன்ஸில் அதிகாரிகள் என 16 பேர் அக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

பிரிட்டன், கட்டார், நேபாளம், நோர்வே, அயர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த கேணல் தர அதிகாரிகள் குழுவில் இடம்பெற்று விரிவுரையாளர்கள் ஆவர்.

யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம், யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளின் இணையப் பிரதிநிதிகள், கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் இன்று தாயகமெங்கும் அனுஷ்டிப்பு

### கோப்பாயில் விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.10

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தமிழழப் பெண்கள் எழுச்சி நாள் இன்று தமிழர் தாயகமெங்கும் பெரும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது.

பெண்கள் எழுச்சிதின விசேட நிகழ்வுகள் கோப்பாயில் இடம்பெறவுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதற் பெண் மாவீரரான 2ஆம் லெப்டினன்ட் மாலதி, இந்திய இராணுவத்துடன் இடம்பெற்ற முதல் நாள் நேரடி மோதலில் சயனைட் அருந்தி வீரச் சாவடைந்த ஒக்ரோபர் 10ஆம் திகதியே தமிழீழப் பெண்கள் எழுச்சி தினமாக விடுதலைப் புலிகளால் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளது. 2ஆம் லெப் மாலதியின் (12ஆம் பக்கம் பார்க்க)

# மேற்குலக பெண்களின் புரட்சியைவிட பெண் புலிகளின் சாதனை அளப்பரியது

## மாலதி படையணியின் நூலுக்கு வழங்கிய ஆசிச்செய்தியில் தலைவர் பிரபா பெருமிதம்



கிளிநொச்சி,ஒக்ரோபர்10

**"மேற்குலகப் பெண்கள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக பெரும் போராட்டங்களை நிகழ்த்தி, புரட்சிகளை நடத்தி, விவாதங்களைப் புரிந்து, கருத்தமர்வுகளை மேற்கொண்டு பெற்றெடுத்தவற்றைவிட, பெண்புலிகள் மிகவும் குறுகிய காலத்தில் எமது பெண்களுக்கு பெற்றுக் கொடுத்த உரிமைகளும் சுதந்திரங்களும் அளப்பரியன."**

**தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மேற்கண்டவாறு பெருமிதம் வெளியிட்டுள்ளார்.**

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட, மாலதி படையணியின் 'விழுதாகி வேருமாகி' என்ற நூலுக்கு வழங்கிய ஆசிச் செய்தியிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்த ஆசிச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எமது பெண் போராளிகளின் அபாரமான போர் ஆற்றலையும், அவர்களது வீரத்தையும் எமது எதிரியே நன்கறிவான். அவன் அறிந்ததை உலகமும் எமது மக்களும் அறியும்படியாக ஒரு நூல் எழுதப்பட வேண்டும்.

இதற்கு எமது போராட்டம் பற்றிய தெளிவான பார்வையும், போருக்குள் நின்ற வாழ்வு அனுபவமும், போர்களைப் பற்றிய அறிவும், எமது (12ஆம் பக்கம் பார்க்க)

(எழுச்சி தினத்தை முன்னிட்டு)

## முல்லையில் நடந்த நிகழ்வில் தலைவர் பிரபா பங்கேற்பு

கிளிநொச்சி,ஒக்.10

2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் 16 ஆவது ஆண்டு நினைவுநாளையும தமிழீழ பெண்கள் எழுச்சிநாளையும் முன்னிட்டு நேற்றுமுன்தினம் முல்லைத் தீவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தமிழீழத் தேசியத் தலைவர் வேபிரபாகரன் கலந்து சிறப்பித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் முல்லைத்தீவில் சிறப்பாக அமைக்கப்பட்ட இரு அரங்குகளில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், மகளிர் (12ஆம் பக்கம் பார்க்க)



அயர்லாந்து சென்றிருக்கும் புலிகள் பிரதிநிதிகள் நேற்று அந்நாட்டு நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்தனர். நாடாளுமன்ற பிரதிநிதி புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கைலாகு கொடுத்து வரவேற்பதை படத்தில் காணலாம்.

## காணிப்பிரச்சினை முறுகலில் முடிந்தது: கிண்ணியாவில் பதற்றம்; ஊரடங்கு அமுல்!

### அமைச்சர் ஹக்கீம் அவசரமாக அங்கு விரைவு

கொழும்பு,ஒக்.10

கிண்ணியா, வைசல் நகரில் இரு சமூகத்தினரிடையே இடம்பெற்ற மோதல்களை அடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

நிலைமையை கட்டுப்பாட்டில் கொண்டுவரும் பொருட்டு நேற்று மாலை 6 மணிமுதல் இன்று காலை 6 மணிவரை அங்கு பொலீஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆலங்கேணிப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமான ஆறு ஏக்கர் நிலம் கடந்த செப்ரெம்பர் 20 ஆம் திகதி மீள்குடியமரும் குடும்பங்களுக்கென வழங்கப்பட்டது.

இதனை விரும்பாத காணிக்கு அருகில் உள்ள பாடசாலை நிர்வாகத்தினர் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து கல்வி நடவடிக்கைகளை ஸ்தம்பிதமடையச் செய்து கிண்ணியா உதவிக் கல்வி வலய அலுவலகத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். அந்தக் காணியிலிருந்து சில குடும்பங்கள் அடித்து (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு 10லட்சம் பேரை திரட்ட சு.க. ஏற்பாடு

கொழும்பு,ஒக்.10

இம்மாத இறுதியில் நடத்தப்படவிருக்கும் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணிக்கு கொழும்பில் பத்து லட்சம் மக்களைத் திரட்டுவதென சுதந்திரக்கட்சி தீர்மானித்திருக்கிறது. இப்பேரணிக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக 18 குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இக்குழுக்களை மேற்பார்வை செய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமார (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குமாறு அமெரிக்கத் தூதரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்றுக் காலை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் புதிய அமெரிக்கத் தூதர் ஜீ.லுன்ஸ்டெட்டைச் சந்தித்துப் பேசியது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் ஆர்.சம்பந்தன், எம்பிக்கள் ஜீ.ஜீ.கஜேந்திரகுமார், என்ரவிராஜ மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இச்சந்திப்பில் பங்குபற்றினர். சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நீடித்தது.

"இலங்கையில் அமைதித்தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் வெற்றிபெற வேண்டும் அதற்கு உதவும் விதத்தில் - ஊக்கமளிக்கும் வகையில் - புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்க வேண்டும்" - என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தூதரிடம் கோரினர். (12ஆம் பக்கம் பார்க்க)

சிறுக சிறுக

பிள்ளைகளுக்காக

குடும்பத்துக்காக

நாட்டுக்காக

நமக்காக

சில்லறைகளானாலும்

சேமிப்போம்.



ஒக்டோபர் மாதம் தேசிய சேமிப்பு

வங்கியின் சேமிப்பு மாதமாகும்.

இன்றே சேமிப்புக் கணக்கொன்றினை

ஆரமபித்து ஒவ்வொரு சதத்தையும்

சேமிக்க பழகுங்கள்.

NSB

PHOENIX O&M



லண்டன் கனக துர்க்கை ஆலயத்தின் அனுசரணையுடன் நிறுவப்பட்ட இலவச கணனிப் பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சிறப்பு விருந்தினரான யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினரான யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நாடாவெட்டி நிலையத்தை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கமும் படத்தில் காணப்படுகின்றார். *(அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# சமூகத்துக்கு உயிர்ப்பூட்ட ஆலயங்கள் முன்வரவேண்டும்!

## கணனி நிலையத் திறப்பு விழாவில் இளம்பரிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

சமூகத்துக்கு உயிர்ப்பூட்ட ஆலயங்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதியத்தால் நேற்று யாழ்.கஸ்தூரியார் வீதியில் - கில்னர்லேனில் இலவச கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு யாழ்.இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக கணனிப் பயிற்சி நிலையத்தின் பெயர்ப்பலகையினை யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி திரைநீக்கம் செய்து வைத்தார்.

பெயர்ப்பலகைக்கான மாலையினை சர்வதேச தமிழீழ மாணவர் சேவையின் இணைப்பாளர் ந.கண்ணன் அணிவித்தார்.

கணனிப் பயிற்சி நிலையத்தினை யாழ் வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றிய யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மக்கள் பலதுறைகளில் முன்னேறியுள்ள போதும், கணனிக்கல்வியில் முன்னேறவில்லை. எங்களுடைய நாட்டினைத்தவிர ஏனைய நாடுகளில் உள்ள வீடுகள் எல்லாம் பல்கலைக் கழகங்களாக மாறிவருகின்றன. அங்கு ஒவ்வொரு வீடுகளிலும் கணனி உண்டு. அவர்கள் வீட்டில் இருந்தவாறே முழு உலகையும் வலம்வரக்கூடிய சூழல் உருவாகியுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தாலும், பொருளாதாரத் தடையினாலும் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். இதனால் தான் அவர்கள் கணனிக் கல்வியில் முன்னேற முடியாத நிலைமை ஏற்பட்டது.

இன்று இணையத்தளங்களில் சமூகத்தை பிழையான வழிக்கு கொண்டு செல்லக்கூடிய காட்சிகளை காணமுடிகிறது. இவ்வாறான சமூகப் பிறழ்வுகளில் இருந்து யாழ். சமூகம் விடுபடவேண்டும்.

யாழ். குடாநாட்டில் பல கணனி நிறுவனங்கள் இயங்குகின்றன. இவை அனைத்தையும் ஒன்றிணைத்து கணனிக் கல்வி தொடர்பாக ஒன்றிணைந்த செயற்பாடு உருவாக்கப்பட வேண்டும்.

எமது மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று கிடைப்பது மிகவும் அரிது. எல்லா மாணவர்களும் கணனிக் கல்வியினை கற்கவேண்டும் என்ற நோக்கில் இந்த நிலையம் உருவாக்கப்படுவது வரவேற்கத்தக்கது.

லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயம் போல் எமது ஆலயங்களும் சமூகத்திற்கு ஏதாவது செய்யவேண்டும். ஆலயம் என்றதுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது.

குடாநாட்டில் உள்ள வசதியடைந்த பாடசாலைகளில் தான் கணனிகள் உள்ளன. வசதிகுறைந்த சிறு பாடசாலைகளில் கணனிகள் இல்லை.

கணனி நிறுவனங்கள் நடத்துபவர்கள் மாணவர்களின் வரவுகளை ஒழுங்குமுறைப்படுத்தவேண்டும்.

மேற்படி கணனிப் பயிற்சி நிலையம் குடாநாட்டில் சமூகத்தில் நன்மதிப்புப் பெற்ற கணனி நிலையமாகத் திகழவேண்டும் - என்றார். (எ-ரி)

# கலைப்பேரரசு ஏ.ரி.பி. நேற்றுக் காலமானார்

## கண்கள் இரண்டும் ஆஸ்பத்திரிக்குத் தானம்



ஈழத்தின் பிரபல நாடக ஆசிரியரும், நடிகருமான கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 75.

கடந்த இரண்டு வருட காலமாக சுகவீனமுற்றிருந்த இவர், நேற்று நண்பகல் மருதடி வீதி, நல்லூரில் உள்ள அன்னாரது இல்லத்தில் காலமானார்.

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், சிறந்த பேச்சாளர், நாடக எழுத்தாளர், இயக்குநர், தயாரிப்பாளர், நாடகரசிகர்.

ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற அன்னார், சமூக நாடகங்கள், வானொலி நாடகங்கள் என சுமார் 50 நாடகங்களை எழுதியும் நடித்தும் நாடக வளர்ச்சில் தனியிடம் பெற்றவர்.

கலையுலகில் ஏ.ரி.பி.என சுருக்கமாக அழைக்கப்பட்ட இவர் இறுதிப்பரிசு, கூப்பிய கரங்கள், தாளக்காவடி, லோபியின் காதல், நிறைகுடம் முதலிய நாடகங்கள் மூலம் பலரது பாராட்டையும் பெற்றவர்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை நல்லூரில் நடைபெறும். அவரது விருப்பப்படி இரண்டு கண்களும் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்குத் தானம் செய்யப்பட்டன. (எ)

# பாவட்டாவில் இருப்பது முகாமல்ல; புலிகளின் கலந்துரையாடல் மண்டபமே!

## நேரில் பார்த்த கண்காணிப்புக் குழு உறுப்பினர் தகவல்

களுவாஞ்சிக்குடி,ஒக்.10

அம்பாறை மாவட்டத்திலுள்ள காஞ்சிரங்குடா, பாவட்டா என்னுமிடத்தில் விடுதலைப் புலிகள் அமைத்திருப்பது முகாமல்ல என்றும் அது கலந்துரையாடல் மண்டபமே என்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

புலிகளின் துணை அரசியல் பொறுப்பாளர் குயிலின்பன் சகிதம், குறிப்பிட்ட இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டதை அடுத்து கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்டப் பிரதிநிதி தேரியா இதனைத் தெரிவித்திருக்கிறார்.

பாவட்டாவில் புலிகள் முகாம் அமைத்திருக்கின்றனர் என்ற படையினரின் முறைப்பாட்டையடுத்தே கண்காணிப்புக் குழு பிரதிநிதி அந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

இது தொடர்பாக அவரிடம் வினவியபோதுஅவர் கூறுகையில்-

அங்கு அமைக்கப்பட்டுள்ளது முகாம் அல்ல கலந்துரையாடல் மண்டபமே. அதனைப் புகைப்படம் எடுத்துள்ளேன். இதை விசேட அதிரடிப்படை உயர் அதிகாரிகளைக் கூட்டிச் சென்று நேரில் காண்பிப்பேன் என்றார். (எ)

# கண்காணிப்புக் குழு - இராணுவ சர்ச்சையை தவிர்க்க திருகோணமலையில் சந்திப்பு

கொழும்பு,ஒக்.10

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இராணுவத்தினருக்கும் இடையே வாதப்பிரதிவாதங்களைத் தவிர்க்க விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இதுதொடர்பான சந்திப்பொன்றுக்கு திருகோணமலையில் அடுத்த வாரம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுனில் தென்னகோன் தெரிவித்தார் என அறியப்படுகிறது.

ஏற்கனவே வெலிஓயா பகுதியில் இவ்வாறான புரிந்துணர்வு சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

குரங்குபாஞ்சான் முகாம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அமைக்கப்பட்டுள்ளது எனவும் சுனில் தென்னகோன் மேலும் கூறினார் எனவும் தெரிகிறது. (எ)


## பிரதமரின் ஐ.நா. சபை உரை:

# நாடாளுமன்றத்தில் 23 ஆம் திகதி முழுநாள் விவாதத்துக்கு தீர்மானம்

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத் தொடரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை குறித்து நாடாளுமன்றத்தில் முழுநாள் விவாதம் நடைபெறும். எதிர்வரும் 23ஆம் திகதி இவ்விவாதத்தை நடத்துவதென எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உபகுழுக்களின் தலைவரான சிறி அற்றாஹென்னதி தலைமையில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

வரவு - செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்துக்கென தினமும் 2 மணி நேரத்தைக் கூடுதலாக ஒதுக்குவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். (எ)



குடாநாட்டின் தற்போதைய நிலையை நேரில் கண்டறிய வருகை தந்த பிரிட்டிஷ் நோயல் இராணுவ பாதுகாப்பு கல்லூரியைச் சேர்ந்த குழுவினர் யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை இணைய அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

## சமாதானப் பேச்சில் முஸ்லிம் தனித்தரப்பை

# பிரதமரின் இந்திய விஜயத்தின்போது இந்தியத் தலைவர்கள் வலியுறுத்துவர்

## தூதுவருடனான சந்திப்பு குறித்து ஹிஸ்புல்லாஹ் தகவல்

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்வரும் இந்திய விஜயத்தின் போது இந்தியத் தலைவர்கள் அவரிடம் வலியுறுத்துவார்கள் என்று இந்தியத் தூதுவர் நிரூபம் சென், வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பிடம் தெரிவித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இந்திய இல்லத்தில் வைத்து வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பு இந்தியத் தூதுவரை சந்தித்த, இச்சந்திப்பில் பேரியல் அஷ்ரப், நூர்தீன் மசூர் உட்பட 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்றது.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூன்று விடயங்களை இந்தியத் தூதுவிடம் தெரிவித்துள்ளனர். அடுத்து வரும் எந்தவொரு பேச்சிலும் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்வதை அனுமதிக்க வேண்டும். அ[illegible]க்கப்படும் இடைக்கால நிர்வாக[illegible]தில் முஸ்லிம்களுக்கு தனியான நிர்வாகக் கட்டமைப்பு வேண்டும். வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு, அச்சம் நீக்கப்பட வேண்டும். இவற்றிற்கு இந்தியாவின் ஆதரவும், ஒத்துழைப்பும் வேண்டும் என்று இந்தியத் தூதுவரிடம் அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

இவற்றுக்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர், முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும். பேச்சுக்களில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் கலந்துகொள்வது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு அடுத்த வாரம் விஜயம் செய்யும் போது இந்தியத் தலைவர்கள் வலியுறுத்துவார்கள் எனத் தெரிவித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். (எ)

# நகரின் முக்கிய வீதிகளில் நேற்று படையினர் குவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

யாழ். நகரப் பகுதியின் முக்கிய வீதிகளில் நேற்றுக் காலை முதல் பெரும் எண்ணிக்கையான படையினர் குவிக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

யாழ் பிரதான வீதி, யாழ் ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி, ஸ்ரான்லி வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றில் நேற்றுக் காலை முதல் மாலை வரை படையினர் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்தனர்.

படையினரில் அநேகர் கையில் கொட்டன்களையும் தாங்கியிருந்ததைக் காணமுடிந்தது.

இதனால், நேற்று வீதிகளில் பயணஞ்செய்த பொதுமக்கள் பதற்றத்துடன் காணப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. (எ-8)

# இலங்கை இராணுவத்தின் ஆண்டு விழா நிகழ்வுகள்

## இராணுவ தலைமையகத்தில் பிரதான நிகழ்ச்சி

கொழும்பு,ஒக்.10

இலங்கை இராணுவம் இன்று தனது 54 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. இது தொடர்பான முக்கிய கொண்டாட்டம் இன்று கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தலைமையில் நடைபெறும்.

இராணுவக் கொடியேற்றல், அணிவகுப்பு மரியாதை என்பனவற்றுடன் இராணுவத் தலைமையகப் புதிய பிரதான கட்டடத்தின் நுழைவாயிலில் நான்கு பிரதான மதங்களின் சமய நிகழ்ச்சிகளும் இடம்பெறும். அவற்றையடுத்து தனது படையினருக்கான உரையை இராணுவத் தளபதி ஆற்றுவார்.

இவ்வாண்டு கொண்டாட்டங்கள் கடந்த முதலாம் திகதி இராணுவத் தலைமையகம் உட்பட சகல இராணுவ நிலையங்களிலும் ஆரம்பமாகின.

இராணுவ ஆண்டு விழாவை முன்னிட்டு சமய நிகழ்ச்சிகள், கொழும்பு கப்பித்தாவத்தை இந்துக்கோயில், தெவட்ட கஹாக பள்ளிவாசல், புனித ஆசையப்பர் கல்லூரி சிற்றாலயம் என்பனவற்றில் நடைபெற்றன. (எ)

# பக்தாத் பொலீஸ் நிலையம் மீது நேற்றுத் தற்கொலைத் தாக்குதல்!



பக்தாத்,ஒக்.10

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள பொலீஸ் நிலையத்தின் மீது நேற்று நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தற்கொலைத தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டனர்; 12 பேர் காயமடைந்தனர்.

சத்ர் பகுதியில் உள்ள பொலீஸ் நிலையத்தின் வளாகக் கேற்றை மோதித தகர்த்தபடி நுழைந்த கார் ஒன்று வாகனங்கள மீது மோதி வெடித்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

உள்ளூர் பொலீஸாருக்கு நேற்று மாதாந்தச் சம்பளம் வழங்கப்பட்டதாகவும் - அதனைப் பெறுவதற்காக சத்ர் பொலீஸ் நிலைய வளாகத்துக்குள் ஏராளமான உள்ளூர் பொலீஸார் திரண்டிருந்ததாகவும் - அந்த வேளையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

நேற்று உள்ளூர் நேரப்படி காலை 8.45 மணிக்கு இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. வெடித்துச்சிதறிய காரில் இரு தற்கொலைத் தாக்குதலாளிகள் இருந்ததாக பொலீஸ் நிலைய வாயிற்காவலர் தெரிவித்தார்.

சத்ர் பகுதி சதாம் ஹுசைனின் ஆட்சிக் காலத்தில் சதாம் நகரம் என்று அழைக்கப்பட்டது. இங்கு ஷியா முஸ்லிம்களே பெரும்பாலும் வாழ்கின்றனர். வறிய குடும்பங்கள் அதிகளவில் இங்கு வாழ்கின்றன. அவர்கள் தமது வறுமையைப் போக்க அமெரிக்காவின ஏற்பாட்டிலான உள்ளூர் பொலீஸ் சேவையில் சேர்கின்றனர். ஆனால், அவ்வாறு சேர்பவர்கள் தேசத்துரோகிகள் என்று சதாமின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

## இராஜதந்திரி படுகொலை!

பக்தாத்தில் நேற்று ஸ்பானிய இராஜதந்திரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஜோஸ் அன்ரோனியோ பேர்னல் கொமேஜ் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவர் நேற்றுக்காலை தனது வீட்டிலிருந்த சமயம், வாயிலில் ஒருவர் வந்து நின்று அழைத்ததாகவும் - அழைப்புக்குப் பதில்கூற வெளியே வந்த இராஜதந்திரியை காரில் காத்து நின்றவர்கள் சுட்டுக்கொன்று விட்டு தப்பிச சென்று விட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கொலையாளிகளின் காரில் வெளிநாட்டுத் தூதரகங்கள் பயன்படுத்தும் இலக்கத்தகடுகள் பொருத்தப்பட்டிருந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இச்சம்பவத்தையடுத்து ஈராக்கில் உள்ள ஸ்பெயின் நாட்டின் தூதரகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தியதை ஸ்பெயின் ஆதரித்தமை குறிப்பிடத்தக்கது.



## இந்தோனேஷிய பஸ் விபத்தில் மாணவிகள் 51 பேர் கருகிப் பலி!

பாலி,ஒக்.10

இந்தோனேஷியாவில் பாடசாலை மாணவிகள் சென்ற பஸ் இரண்டு வாகனங்களுடன் ஒரே நேரத்தில் மோதியதில் பஸ்ஸில் இருந்த 51 மாணவிகள் உட்பட 54 பேர் அவ்விடத்திலேயே பலியாகினர்

இந்தோனேஷியாவின் கிழக்குப் பகுதியான ஜாவாவில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

பாலித்தீவில கல்விச் சுற்றுலாவை முடித்துக்கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்த வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.



இந்தோனேஷிய பஸ் விபத்தில் உயிரிழந்த மாணவிகளின் தோழிகள் கதறி அழும்காட்சி.

வேகமாக வந்த லொறி ஒன்று பாடசாலை பஸ்மீது நேருக்கு நேர் மோதியது. அதே கணம் பாடசாலை பஸ்ஸின் பின்னால் வந்த மினி பஸ்ஸும் பாடசாலை பஸ் மீது பயங்கரமாக மோதியது. இதனால் பஸ்ஸினுள் இருந்த 51 மாணவிகளும் இரண்டு ஆசிரியர்களும் சுற்றுலா உதவியாளரும் நசிர்ந்துவிட்டனர். அதன் பின்னர் பஸ்ஸின் பெற்றோல் தாங்கி வெடித்துச் சிதறி பஸ்ஸில் திடீரென ஏற்பட்ட தீயினால் 51 பேர் எரிந்து கருகிப் போய்விட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். பஸ் சாரதியும், உதவியாளரும் பாய்ந்து தப்பி ஓடிவிட்டனர். பொலீஸார் இவர்களைத் தேடிவருகின்றனர்.

சுற்றுலாவுக்காக மூன்று பஸ்கள் மாணவர்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்தன. ஏற்றமான வீதி ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது எதிராக கட்டுப்பாடின்றி வந்து கொண்டிருந்த லொறி மூன்றாவது பஸ் மீது மோதியது. பின்புறமிருந்து மினி பஸ்ஸாலும் மோதப்பட்டதும் திடீரென தீப்பிடித்துக் கொண்டது. இரண்டு பக்கங்களிலும் விபத்து ஏற்பட்டதால் பஸ்ஸின் பின் கதவு வழியாக மாணவிகள் வெளியேற முடியாமல் போய்விட்டது.

இவ்வாறு பொலீஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப மாணவிகளின் பாடசாலை காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

விபத்து நடைபெற்ற வீதியில் போக்கு வரத்துக்கள் 3 மணித்தியாலங்கள் தடைப்பட்டிருந்தன. விபத்து நடைபெற்ற வீதி நெருக்கடி மிகுந்ததும் நன்கு பராமரிக்கப்படாததுமாகும்.

## இனித் திரைப்படங்களில் நடிக்க நேரமில்லை என்கிறார் ஆர்னோல்ட்

'டெர்மினேட்டர்' போன்ற அதிரடிப் படங்கள் மூலம் சினிமாவில் இமாலய வெற்றிகளைக் குவித்த ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர், கலிபோர்னிய ஆளுநர் தேர்தலில் எதிர்பாராத பெரு வெற்றியைக் குவித்து அரசியலிலும் சாதனை படைத்திருக்கிறார்

ஆனால், அவரது அரசியல் வெற்றி காரணமாக எதிர்காலத்தில் சினிமாவில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பை அவரது ரசிகர்கள் இழந்திருக்கின்றார்கள்.

அமெரிக்காவின் செல்வந்த மாநிலமான கலிபோர்னியா, சீர்கெட்ட பொருளாதாரக் கொள்கைகளால் சீரழிந்து போய்க்கிடக்கிறது. அதனை நிமிர்த்தும் பொறுப்பு புதிய ஆளுநர் தலையில் வீழ்ந்திருக்கின்றது.

பெரிய சவால்களை எதிர்கொள வேண்டிய நிலையில் இருக்கிறேன். அதனால் படங்கள் குறித்து சிந்திக்க நேரமில்லை - என்று அவர் கூறினார்.

## அரபாத்துக்கு மாரடைப்பு!

பலஸ்தீனத்தலைவர் யஸீர் அரபாத்துக்கு கடந்த வாரம் இலேசான மாரடைப்பு ஏற்பட்டதாக தாமதமாக வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் இச் செய்தி வெளியாகியிருந்தால் விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்ந்திருக்கும் என்பதால் இதைத் தெரியப்படுத்தவில்லை என்று பெயரை வெளியிட விரும்பாத அரபாத்தின் நெருங்கிய உதவியாளர் கூறினார்.

அரபாத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று இஸ்ரேல் துடித்துக் கொண்டிருக்கையில், இச்செய்தி உடனடியாக வெளியாவது நல்லதல்ல என்று நினைத்தோம் என்றார் அவர். அரபாத்தின் ஆரோக்கியம் தற்போது முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது; பயப்படத் தேவையில்லை என்று டாக்டர்கள் கூறியுள்ளனர்.

## சூகியை விடுவிக்குமாறு ஜப்பான் வேண்டுகோள்

மியான்மர் ஜனநாயகக் கட்சித் தலைவி ஆங்சான் சூகியை உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென்று ஜப்பானியப் பிரதமர் ஜூனிசிரோ கொய்ஸூமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தோனிஷியாவில் நடைபெறும ஆசியான் மாநாட்டில் பங்கேற்க வந்த ஜப்பானிய பிரதமரும், மியான்மர் பிரதமரும் சுமார் 5 நிமிடம் சந்தித்துப் பேசினர். அப்போது மியான்மர் பிரதமரிடம் இந்த வேண்டுகோளை விடுத்தார் கொய்ஸூமி.

மியான்மரின் பொருளாதார மற்றும வளர்ச்சிப் பணிகளுக்கு ஜப்பான் அதிக உதவியிருந்து வந்தது. கடந்த மே 30ஆம் திகதி ஆங்சான்சூகி மீண்டும் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கபட்டதை அடுத்து மியான்மரின் வளர்ச்சிப் பணிகளுக்கான உதவியை ஜப்பான் நிறுத்திவிட்டது.

## அமெ. அதிபர் மாளிகையில் தீபாவளி கொண்டாட்டம்?

வாஷிங்டன்,ஒக்.10

அமெரிக்க அதிபர் மாளிகையில் தீபாவளியைக் கொண்டாடுவது பற்றி பரிசீலிக்கப்பட்டுவருகிறது.

இத்தகவலை அதிபரின் செய்தித் தொடர்பு செயலாளர் ஸ்காட் மெக்கிளிலன் தெரிவித்துள்ளார்.

கடந்தமுறை அமெரிக்க அதிபர் தேர்தல் நடந்தபோது தீபாவளி தினத்தை அதிபர் மாளிகையில் கொண்டாடுவது குறித்து விவாதம் நடைபெற்றது. ஜோர்ஜ் புஷ்ஷை எதிர்த்து அப்போது தேர்தலில் போட்டியிட்ட அல் கோர், தான் வெற்றி பெற்றால் தீபாவளி பண்டிகை அரசு விடுமுறை தினமாக அறிவிக்கப்படும் என்று அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், அவர் தேர்தலில் தோல்வியடைந்தார்.

இந்நிலையில், தற்போது அதிபரின வெள்ளை மாளிகையில் தீபாவளி கொண்டாடுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளமை அமெரிக்காவில் வாழும் இந்தியர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த ஆண்டு புதிய அதிபருக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலேயே இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

உலக அரங்கில்

### கொங்கோவில் இறந்தோரின் எண்ணிக்கை உயர்வு !

கின்ஸஸா,ஒக்.10

வடகிழ் கொங்கோவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் நேற்று மட்டும் 40 குழந்தைகள் உட்பட 65 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்; 20 பேர் காயமடைந்துள்ளனர்.

- இவ்வாறு ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற பிரதேசங்களிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தகவல் கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

ஆதலால் உயிரிழப்புகள், சேத விவரங்கள் குறித்த உறுதியான செய்திகள் வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.



கொலம்பியத் தலைநகர் பொகொடாவில் நேற்று இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில் இரு பொலீஸ் அதிகாரிகள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்; 12 பேர் படுகாயமடைந்தனர். இக்குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தைப் படத்தில் காணலாம்.

## அராலியில் வைத்திய சேவை

## கமலா கிளினிக்

இடம்: அராலி தெற்கு, அராலி (Dr. நாகரட்ணம் வீட்டுக்கு அருகில்)
பார்வையிடும் நேரம்: 9.30 - 12.30
2.30 - 4.00

வழங்கும் சேவைகள்:

1. பொது மருத்துவம், குழந்தை மருத்துவம்.
2. நெபிலைஷசர் வசதி.
3. இரத்த, சல பரிசோதனைகள்.
4. வைத்திய நிபுணர்களைப் பதிவுசெய்தல்.

(23338) (25-24-15-19)



## தேவை

போட்டோஸ்ரற் பிரதி செய்வதில் அனுபவமுள்ளவர்கள் (பெண்கள் மட்டும்) தேவை. 11 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் வரவும்.
*(மாநகர சபை எல்லைக்குள் உள்ளவர்கள்)*

**சன்லைற் றைக்கிளீனேர்ஸ்**
பஸ் நிலையம் முன்பாக,
(23453) யாழ்ப்பாணம். (24-15-19)


# புன்னாலைக்கட்டுவனுக்கு விரைவில் மின்சாரம்

புன்னாலைக்கட்டுவன் பிரதேச மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கேற்ற நடவடிக்கைகளை சுன்னாகம் மின்சார சபையினர் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

மின்சாரத்தை விரைவில் வழங்குவதற்காக தற்பொழுது உயர் அழுத்த மின் இணைப்புகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்தவுடன் வீட்டுப் பாவனையாளர்களுக்கு வேண்டிய மின் இணைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

உயர் அழுத்த மின்சார இணைப்புக்களை மேற்கொள்வதற்கு வசதியாக மின் இணைப்புகள் மேற்கொள்ளப்படும் வீதி ஓரங்களில் உள்ள மரங்கள் பலவும் மின்சார சபையினரால் தறிக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அருகில் உள்ள காணியில் மின்மாற்றி பொருத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. (ஒ-152)

# மருந்துக்கலவையாளர் இன்றி கைதடி மருந்தகத்தில் சிரமம்

கைதடி, ஒக்.10

கைதடியில் உள்ள அரச மத்திய மருந்தகத்தில் மருந்துக் கலவையாளரும், பெண் ஊழியரும் கடமையில் இல்லாமையால் நோயாளர்கள் பெரும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருந்தகத்துக்கு நாளாந்தம் 70இற்கு குறையாத நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றார்கள். மருத்துவர் ஒருவரும், சுகாதாரத் தொழிலாளியுமே இங்கு கடமைபுரிகின்றார்கள்.

நோயாளர்களைப் பரிசோதிக்கும் வைத்தியரே உடனடியாக மருந்தையும் வழங்க வேண்டிய அவலநிலையில் இருக்கிறது. இதனால் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

கர்ப்பிணிப் பெண்களும் ஏனைய பெண்களும் இங்கு சிகிச்சைக்காக வரும்போது அவர்களிடம் பரிசோதனையை மேற்கொள்ள பெண் ஊழியர் எவரும் இல்லாததினால் நோயாளர்களோடு வைத்தியரும் சிரமப்பட வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகின்றார்கள்.

மாகாண சுகாதார சேவைகள் பணிமனை இங்குள்ள நோயாளர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு மருந்துக் கலவையாளர் ஒருவரையும், பெண் ஊழியர் ஒருவரையும் நியமிக்க வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இம்மருந்தகத்தில் அரச விடுமுறை, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8.00மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை மக்களுக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (ம-75)

## மரம் கடத்தியவர் விளக்க மறியலில்

தென்மராட்சி, ஒக்.10

அனுமதிப்பத்திரம் இன்றி 'லான்ட் மாஸ்ரரில' வாகனத்தில் மரம் ஏற்றிச் சென்றவர் கைதடியில் பொலீஸாரிடம் சிக் கிக்கொண்டார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்றது.

லாண்ட்மாஸ்டரின் சாரதியை சாவகச்சேரி பொலீஸார் நீதிமன்றில் ஆஜர் படுத்தினர்.

இவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-117)


# இரு நாள்கள் யாழ். நகரில்!

**யாழ். குடாநாட்டுப் பெண்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!!**
**அழகுக் கலையை அழகுறக்கற்று அழகு பார்ப்பதற்கு**
**உங்களுக்கு இதோ மீண்டும் ஒரு சந்தர்ப்பம்!!!**

பிரபல அழகுக்கலை நிபுணர் **திருமதி பிறேமா ஜெகன்**
(Diploma in Beauty Culture - India) 31A Mary's Road, Colombo-4

அவர்களினால் நடத்தப்படும் **விசேட அழகுக்கலை வகுப்புகள்** மீண்டும் இம்மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி தம்பர் மண்டபத்தில் காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை நடைபெறும்.

11.10.2003 இல்
* Bleaching (3 Types)
* Facial (3 Types)
* Waxing
* Eye Brow Threading
* Saree Pleating
* Bridal Dressing (Hindu & Christian)

12.10.2003 இல்
* Facial (3 Types)
  (1) Gold Facial (24kt) (2) Pearl Facial
  (3) Fruit Facial
* Perming
* Straightening * Hair Colouring
* முக அழகு சிகிச்சை பற்றிய குறிப்புகள்

ஆகியவை குறிப்புகளுடன் உரிய செய்முறைப் பயிற்சிகள் மூலம் கற்பிக்கப்படும்.
குறைந்த கட்டணத்தில் நிறைந்த பயனைப் பெற்றுக்கொள்ள பதிவுகளுக்கு முந்துங்கள்!

மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்:- 0777 - 471125
அல்லது 9 ஆம் 10 ஆம் திகதிகளில் (வியாழன், வெள்ளி)
யாழ். மத்திய கல்லூரியில் நேரில் அறிந்துகொள்ளலாம்.
- ஏற்பாட்டாளர்.

(23424) (24-15-19)



## ஹற்றன் நஷனல் வங்கியினால் நடத்தப்படும் ஆண்டு 2003 இற்கான கூடைப்பந்தாட்டப் போட்டிகள்

கழகங்கள்: ஆண்கள், பெண்கள்
பாடசாலைகள்: ஆண்கள், பெண்கள்

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள், பாடசாலைகள் தங்களது விண்ணப்பங்களை ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளையில் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.

விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித்திகதி :- 17.10.2003
அணி ஒழுங்குத் தெரிவு :- 20.10.2003 மாலை 4.30 மணிக்கு

ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளையில் இடம்பெறும் அணி ஒழுங்குத் தெரிவின்போது பங்குபற்றும் கழகங்கள், பாடசாலைகளில் இருந்து ஓர் உறுப்பினர் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

# ஹற்றன் நஷனல் வங்கி

## உலக சேமிப்புத் தினத்தையொட்டி

## சிறுவர் உங்களைச் சேமிக்க அழைக்கிறது!

ஒக்ரோபர் 31 ஆம் திகதியிலான
உலக சேமிப்பு தினத்தையொட்டி
***ஹற்றன் நஷனல் வங்கியின்***
***எல்லாக் கிளைகளும்...***
ஒக்ரோபர், 18 சனிக்கிழமை
....திறந்து வைக்கப்பட்டிருக்கும்.




'ஸ்டாஸன் ஃபுட்ஸ்' வழங்கும் இலவச சொக்கலேட்
சந்தோஷத்திற்கும் உற்சாகத்திற்கும் சுவைமிக்க M&S

**இத்தினம்**
* "சிங்கிதி" கணக்கொன்றை ஆரம்பிக்கவும்
* "ஜம்போ" உண்டியலில் நீங்கள் சேமித்த பணத்தை வங்கியில் வைப்புச் செய்யவும்
* உங்களுடைய "சிங்கிதி" கணக்கில் புது வைப்புக்களைச் செய்யவும் முடியும்!

ஹற்றன் நஷனல் வங்கியின் எந்தக் கிளையுடனாயினும்
கொடுக்கல் வாங்கல் செய்யும் சிறுவர்கள் அனைவருக்கும்
அழகிய பரிசுகள்!

| ரூ. 10,000 வைப்பிற்கு - சுவர்க்கடிகாரம் | ரூ. 200 வைப்பிற்கு - பென்சில் பை | ரூ. 2,500 வைப்பிற்கு - 'ஜம்போ' உண்டியல் |
|---|---|---|

வாருங்கள்!
**சின்னஞ் சிறுவர்**
**உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றோம்!**

மேலதிக விவரங்களுக்கு அருகிலுள்ள **ஹற்றன் நஷனல் வங்கிக்கிளையை** நாடுங்கள்.

***ஹற்றன் நஷனல் வங்கி***
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி.

(C/30600) (24-15-19)


# கண்ணீர் அஞ்சலி

ஸ்ரீராம ஜெயம்



பரதக்கலைமேதை மாமணி

## பிரம்மஸ்ரீ வீரமணிஐயர்

அவர்களின் மறைவை முன்னிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகத் தெரிவித்து, அன்னாரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஆதீன மகாசபை
வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள்
தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

(23472) (15-19)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா புவனேந்திரன் கணபதிப்பிள்ளை

முதலாம் கட்டையடி, கச்சாய் வீதி, சாவகச்சேரியை சேர்ந்தவரும் ஆவரங்கால் சந்தி, ஆவரங்காலை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவருமான சு.பு.கணபதிப்பிள்ளை அவர்கள் காலமானார்.

அன்னார் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் கலைவாணி, கலைச்செல்வி, பாஸ்கரன் (லண்டன்), யோகேந்திரன் (லண்டன்), அனுசுயா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரன், அருந்திரகுமார், பாலயமுனா, பூவா (லண்டன்), வேலழகன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆவரங்கால் சந்தி, ஆவரங்கால் (ராஜஸ்தான்) என்னும் தற்காலிக இருப்பிடத்தில் இன்று (10.10.2003) வெள்ளிக்கிழமை பி.ப.1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*ஆவரங்கால்,*
*புத்தூர்.*
(23474) (26-15-19)

தகவல்:
திருமதி யோ. கணபதிப்பிள்ளை
*(மனைவி)*

## திருமதி இராசையா நல்லம்மா

கோண்டாவில் கிழக்கு, நாராயணன் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசையா நல்லம்மா 08.10.2003 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இராசையா அவர்களின் அன்பு மனைவியும் யோகம்மா, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நந்தகுமார் (கனடா), தயானந்தகுமார் (கனடா), சுரேந்திரகுமார் (கனடா), சத்தியானந்தகுமார் (கனடா), யமுனா, தேனுகா (சுவிஸ்), சந்திரிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகராணி (கனடா), சண்முகலிங்கம் (மோட்டார் போக்குவரத்து திணைக்களம், யாழ். செயலகம்), குமரநாதன் (சுவிஸ்), கஸ்தூரி (கனடா), துங்கேஸ்வரராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் நவநீதா, நவரூபன், சங்கவி, நிவேதா, நிரோஜா, துவாரகா, ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.10.2003) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10மணிக்கு கோட்டைக்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாராயணன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*
(23475) (15-19)

தகவல்:
நா. இராசையா
(கணவர்)

உதயன்

# மகளிர் எழுச்சியின் மகத்துவ நாள்!

ஈழத்தமிழர்களின் பிரதேசங்கள் எங்கும் பெண்கள் எழுச்சி நாள் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

ஈழத்தமிழர் பிரதேசங்கள் உட்பட உலகெங்கும் மார்ச் 8 ஆம் திகதி மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது.

ஆனால், அதற்கு மேலாக ஒக்ரோபர் 10 ஆம் திகதியை மகளிர் எழுச்சி நாளாக ஈழத்தமிழர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள். அதற்கு சிறப்பான காரணங்கள உண்டு.

வீட்டுக்குள் அடங்கியும் - அடக்கப்பட்டும், அடுப்பங்கரையில் முடங்கியும், முடக்கப்பட்டும் கிடந்த ஈழத்தமிழ பெண்கள், வீறுகொண்டெழுந்து விட்டார்கள் என்பதை உலகுக்குப் பறைசாற்றும் நாளாக ஒக்ரோபர் பத்து திகழ்கின்றது.

ஆம், ஈழத்தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போரில் களப்பலியான முதலாவது பெண் போராளி - மாவீரரான - இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு நாள்தான் மகளிர் எழுச்சி நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

1987 இல் இந்தியப் படை, ஈழத்தமிழரின் பிரதேசங்களை இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்த முயன்ற சமயம் அதை எதிர்த்து களத்தில் சமராடி, தன்னுயிர் ஈந்து, விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு பற்றிய புதிய பரிணாமத்தை விரிவடைய வைத்தார் இரண்டாம் லெப்டினன்ட் மாலதி.

பெண்கள் உரிமை, பால் சமத்துவம் குறித்தெல்லாம் சர்வதேச மட்டத்தில் 'வெத்துவேட்டு' பிரசாரங்களும், அறிக்கைகளும், கட்டுரைகளும் வெளியிட்படடுக் கொண்டிருக்க, அதனை பெரும் எழுச்சியாக - செயலில் - வெளிப்படுத்திக் கொண்டிருகின்றார்கள் ஈழத்தமிழ்ப் பெண்கள்.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை அடிமைப்பட்டுக் கிடந்த பெண்ணினம் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் விழித்துக்கொண்டது. கல்வி உரிமை கூட மறுக்கப்பட்ட பெண்கள், தங்களைப் புத்தூக்கப்படுத்திக் கொண்டதால் கல்வி மற்றும் பொருளியல் துறைகளில் உயர்வுறும் சூழ்நிலை ஏற்பட்டது. இப்போது பல்கலைக்கழகக் கல்வி கற்போரில் அறுபது வீதமானோர் பெண்கள் என்ற புள்ளிவிவரம், உயர் கல்வித்துறையில் பெண்களின் பங்களிப்பை - இடத்தை - உறுதிப்படுத்தப் போதுமானதோர் உதாரணமாகும்.

காலங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த உலகின் பல்வேறு இனக் கலாசாரங்கள், பண்பாடுகள் பெண்களின் ஆளுமையை நிராகரிக்கும் பண்பையே அடித்தளத்தில் கொண்டிருந்தன. அந்தப் பண்புப் போக்கில் பெரிய மாற்றம் இப்போது நிகழ்ந்து வருவதை யதார்த்தத்தில் காண்கின்றோம்.

பெரிய அளவில் அந்தப் பண்பு மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை ஈழத்தமிழ் மகளிருக்கு உண்டு. பால் நிலை சமத்துவம், பால் நிலை நீதி என்பவற்றுக்காக வழமையாகப் பெண்கள் போராடும் நிலைமைக்கு அப்பால் சென்று, பால் நிலை வீரத்தை வெளிப்படுத்தும் விஞ்சிய நிலையில் - உச்சத்தில் - மிளிர்கிறார்கள் அவர்கள்.

சமூகத்தில் ஆணுக்கு நிகரானவள் பெண் என்றும், அவளுக்கு சமூகத்தில் சமவுரிமை வழங்கப்படுவது அவசியம் என்றும் பழைய பல்லவிக் குரல்களை ஏனையோர் எழுப்பிக் கொண்டிருக்க, சமூகத்தில் மட்டுமல்ல, சமராடும் களத்திலும் ஆண்களுக்கு நிகரான வீரம்மிக்கவர்கள் பெண்கள் என்பதை செயலில் நிருபித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

அடுக்களையில் இருந்து அகப்பை ஏந்திய தமிழ்ப் பெண்கள் இன்று அதிரடித் தாக்குதலுக்காக ஆயுதங்கள் ஏந்தவும் தயாராகி விட்டார்கள். அன்று தங்க மாலைகளை கழுத்தில் அடுக்கியிருந்த பெண்ணினம் இன்று நஞ்சு மாலையைக் கழுத்தில் தாங்கி நிற்கின்றது.

இந்த எழுச்சியை - உயர்ச்சியை - வெளிப்படுத்தி, பெண்ணினத்தை மேலும் உயர்த்துவதே இந்த 'மகளிர் எழுச்சி நாள்' அனுஷ்டிக்கப்படுவதன் நோக்கம்.

"பாரதி கண்ட புதுமைப் பெண் ஈழத்தில் பிறந்து விட்டாள்" - என்ற செய்தியை உலகுக்குப் பறைசாற்றும் தினமாகவும் இன்றைய நாளைக் கொள்ளலாம்.

பெண்ணை வெறும் போகப் பொருளாகவும், வீட்டு அடிமையாகவும், குடும்பப்பாரத்தை தனியே சுமக்கும் சுமைதாங்கியாகவும் கருதும் காலத்தைக் கடந்து, தேவையெனில் வீரம் கொண்ட புயலாகவும் பெண்கள் மாறுவார்கள் என்பதை உலகுக்கு உணர்த்தும் நாளாகவும் இன்றைய தினம் அமைகின்றது.

## காலத்தின் பதிவு



பட்டமரத்தில் துளிர்க்கும் நம்பிக்கை... படம் : தீபன்

யாழ். பல்கலைக்கழக ஊடக நிலைவள நிலையத்தினால் அண்மையில் செய்திப் புகைப்பட செயலமர்வு நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டவர்கள் செயலமர்வின் இறுதிநாளன்று திவகம், யாழ்.நகரில் முஸ்லிம்களின் பகுதி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்குச் சென்று பல புகைப்படங்களை எடுத்தனர். இயல்பான வாழ்க்கையையும் இயற்கையைப் பதிவுசெய்வனவாகவும் அந்தப் புகைப்படங்கள் அமைந்தன. அவற்றில் இருந்து சில படங்கள் தொடர்ந்து இங்கே பிரசுரமாகவுள்ளன.

# வடக்கு - கிழக்கு மாகாண சபையில் இதுவரை கணக்குகள் சரியாகப் பேணப்படவில்லை

திருகோணமலை,ஒக்.10

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கணக்குகள் இதுவரை சரியான முறையில் பேணப்படவில்லை என்று குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டுக்களை ஆளுநர் அசோக ஜெயவர்த்தன ஏற்றுக்கொண்டுள்ளார்.

கணக்குப் பதிவுநர்கள் சிலர் குறைந்த செயலாற்றல் உடையவர்களாக இருந்தமையே இதற்குக் காரணம் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் அண்மையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் ஆளுநர் கலந்துகொண்டபோது அவரிடம் பதில் கணக்காளர் நியமனம் தொடர்பாக எழுதுநர் அதனோடிணைந்த சேவைகள் சங்க பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர்.

பதில் கணக்காளராக நியமனம் வழங்கப்பட்ட கணக்குப் பதிவுநர்களின் நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்டு, தகுந்த தகைமைகள் இல்லாத நபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் குறித்தே எழுதுநர் அதனோடிணைந்த சேவைகள் சங்க, பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த ஆளுநர், இவ்வளவு காலமும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கணக்குகள் சரியான முறையில் பேணப்படவில்லை என்று தெரிவித்தார்.

சரியான தகைமைகள் இல்லாமல் பதில் கணக்காளர்களாக நியமனம் பெற்ற சிலரின் திறமையற்ற செயற்பாடே இதற்குக் காரணம் என்றும் தெரிவித்த ஆளுநர், அத்தகையவர்களின் விவரங்களை தனக்குத் தருமாறும் சங்கப் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார். (ம-148)

# 'கசூரினா பீச்' பிரதேசத்தை புனரமைப்பதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.10

குடாநாட்டின் பிரதான சுற்றுலா மையமாக விளங்கும் 'கசூரினா பீச்' பிரதேசத்தை புனரமைத்து அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள முகாமையாளர் துரைசிங்கம்.

யாழ்குடாநாட்டிலுள்ள கரையோரப் பகுதிகளைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுக் காலை 9மணிக்கு யாழ்.செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கரையோர பாதுகாப்புத் திணைக்கள முகாமையாளர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து தென்பகுதியில் இருந்து பெருமளவான மக்கள் யாழ். குடாநாட்டிற்கு வருகின்றனர். இங்கு வருகின்ற மக்கள் தமது சுற்றுலா மையமாக 'கசூரினா பீச்' கடற்கரையோரப் பிரதேசத்தையே பயன்படுத்துகின்றனர்.

இதனால் இப்பிரதேசத்தைப் புனரமைத்து சுற்றுலாமையமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என யாழ். பல்கலைக்கழகம் உட்பட பல்வேறு அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. அதனைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது எமது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது வருங்கால இளம் சந்ததியினரின் நன்மைகருதி கடற்கரையோரப் பிரதேசங்களை பாதுகாப்பதும், அதனை அபிவிருத்தி செய்வதும் எமது கடமையாகும்.

கடற்கரையோரத்திலுள்ள பகுதிகளில் ஏதாவது வேலைத் திட்டங்கள் மேற்கொள்வதானால் அதற்கு கடற்கரைப்பாதுகாப்புத் திணைக்களத்திடம் அனுமதி பெறப்படவேண்டும். அவ்வாறு பெறப்படாதவிடத்து அவற்றைத் தடுப்பதற்கு எமக்கு உரிமையுண்டு.

வடபகுதியிலுள்ள கரையோர வளங்களை நாம் பாதுகாப்பதற்கான செயல் திட்டங்களை உருவாக்க வேண்டும். அதன் மூலம் கரையோர வளங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தவகையில், மாணவர்கள், பொதுமக்கள், அரசியல்வாதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு கரையோர வளங்கள் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் - என்றார்.

கடற்கரையோரப்பாதுகாப்புத் திணைக்கள உதவி முகாமையாளர் காமினி கமகே மற்றும் விஜயபாலா, சிரேஷ்ட இணைப்பாளர் ஆர்.இரத்தினம், யாழ். செயலகப்பிரதித்திட்டமிடற் பணிப்பாளர் என்.சிவபாதசுந்தரம், செயலக உயரதிகாரிகள், பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் உட்பட பலர் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். (ப-5)

நாளை
புரட்டாதி 24
சனிக்கிழமை
(11.10.2003)
திதி : பிரதமை
பிற்பகல் 2.40 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
முழுவதும்
சுபநேரம்: 3.02-4.32
ராகுகாலம்: 9.02-10.32
(பழைய நேரப்படி)

உதயவாக்கு
புத்தகங்கள் இல்லாத வீடும் ஜன்னல்கள் இல்லாத இல்லமும் ஒன்றுதான்.

# கலங்கரை விளக்குகளை புனரமைக்கக் கோரிக்கை

யாழ். குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் உள்ள கலங்கரை விளக்குகளைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கரையோரப் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்ட அரச அலுவலர்களாலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்குடாநாட்டில் காங்கேசன்துறை, பருத்தித்துறை, காரைநகர் ஆகிய மூன்று இடங்களிலும் வெளிச்ச வீடுகளும், மணற்காடு, குடத்தனை ஆகிய பகுதிகளில் வெளிச்ச கோபுரங்களும் உள்ளன.

இவை கடந்த பல வருடங்களாக புனரமைக்கப்படாது இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாது, வெளிச்ச வீடுகள் புனரமைக்கப்படாமையினால் அப்பகுதியில் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே, இவற்றைத் துரிதகதியில் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது. இந்த வெளிச்ச வீடுகள் காங்கேசன்துறை வெளிச்சவீடு உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆசிரிய சேவையில்

25

1978-2003

வருடங்கள்
நிறைவு செய்து
எம்மை வழிநடத்தும்
எம் ஆசானை




கணித ஆசான்

## திரு.த.வரதராஜா

*உதவி அதிபர்* (ஒழுக்காற்று)
*யாழ். மத்தியகல்லூரி*

(23454) (26-15-19)

பல்லாண்டுகள் வாழ்ந்து
மேலும் நற்பணிகள் பல ஆற்றவேண்டுமென்று நாமும் வாழ்த்துகின்றோம்.

*The Express Institute*
Irupalai, Kopay.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஆளணியினர்.


# வயோதிபப் பெண்ணின் சங்கிலி சைக்கிளில் வந்தவரால் அறுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

ஆள்நடமாட்டமற்ற நேரத்தில் ஒழுங்கையில் சென்ற வயோதிபப் பெண்ணின் கழுத்தில் இருந்த 5பவுண் சங்கிலியை அறுத்தெடுத்த திருடன் ஓடித் தப்பித்துக்கொண்டான்.

பருத்தித்துறை ஓராம் கட்டைச் சந்திப் பகுதியில் உள்ள ஒழுங்கையிலேயே கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 6மணிக்கு இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

அவ்வொழுங்கைப் பகுதியில் வாழும் இந்த வயோதிபப் பெண் சந்தியில் உள்ள பேக்கரியில் பாண் வாங்கிக் கொண்டு சென்ற வேளையே சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவன் அப்பெண்ணை நெருங்கி சங்கிலியை அறுத்தெடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-15)


## கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம். பரந்தன் (வ்-து)

பதிவு எண்:-பிஏ47 திகதி:-10.02.1971

### பாரவூர்தி 26ஸ்ரீ5870 பகிரங்க ஏலவிற்பனை

### 15.10.2003

(எஞ்சின், உடற்கோப்பு நல்ல நிலையில் உள்ளது)

சங்கத்தின் பாவனையிலுள்ளதும் நல்ல நிலையிலுள்ள இசுசு பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புகின்றவர் மீளளிப்பு வைப்பாக ரூபா ஐந்நூறு (500/-) செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றிருத்தல் வேண்டும்.
இப்பாரவூர்தியினை 06.10.2003 தொடக்கம் 12.10.2003 வரை பரந்தன் சந்தி முல்லைத்தீவு வீதியிலுள்ள எமது தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

ஏலவிற்பனை 15.10.2003 ஆம் திகதி நண்பகல் 12.00மணிக்கு சங்க தலைமை அலுவலகத்தில் (பரந்தன் சந்தி) இடம்பெறும்.

தலைவர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம்,
பரந்தன்.

(C/30412) (26-15-19)



# மக்கள் வங்கி, மானிப்பாய்

(நீடிக்கப்பட்ட கருமபீடம்)

வாடிக்கையாளர்களுக்கான

## முக்கிய அறிவித்தல்

## அடகு பிடித்தல் சேவை

எமது வாடிக்கையாளரின் நன்மை கருதி, எமது அடகு பிடித்தல் சேவை சாதாரண வேலை நாள்களில் பிற்பகல் 5.00 மணிவரை இக்கரும பீடத்தில் நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மற்றும் வெளிநாட்டு உண்டியல்களை மாற்றுதல், வியாபாரக்கடன் வசதி, நடைமுறைக்கணக்குப் பரிமாற்றங்கள் மற்றும் சகல வங்கிச் சேவைகளும், எமது ஸ்ரான்லி வீதிக்கிளையுடன் இணைக்கப்பட்டு சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன என்பதனையும் அறியத் தருகின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு இந்த நீடித்த கருமபீட கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பிரதேச முகாமையாளர்
மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(சி-30594) (25-15-19)


## விண்ணக வாழ்வின் 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணகத்தில் | விண்ணகத்தில் |
|---|---|
| 28 | 10 |
| 02 | 10 |
| 1928 | 1997 |



பேரருட்திரு.

### டாக்டர் டி.ஜே.அம்பலவாணர்

(தென்னிந்திய திருச்சபை - யாழ். பேராயர் 2ஆம் பேராயர்)

ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்த கடவுள்
எங்களையும் அவரோடு உயிர்த்தெழச் செய்து
அவர் திருமுன் நிறுத்துவார் 2கொ.4.4

ஆண்டாறு சென்றாலும் உங்கள் நினைவலைகள்
ஒருபோதும் எம்நெஞ்சை விட்டகலாது.

*கிறீன் நினைவு மருத்துவமனை,*
*மிஷன் இல்லம்,*
*மானிப்பாய்.*

(23365) (25-15-19)


உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் , பேரன்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர்

### கணபதிப்பிள்ளை சிவபாதம்

(இராசு)



அன்னை மடியில் 29.06.1936
இறைவன் அடியில் 10.09.2003

மாதமொன்றாகி விட்டும்
மாறவில்லை எம்துயரம்
நீண்ட தூரம் நீங்கள் சென்ற
காரணந்தான் ஏனோ?
ஆண்டவனின் அடிபற்றிச்
சென்றீரோ அப்பா?
அகிலமதில் உம்மையெனிக்
காண்பது தான் எப்போது?

எங்கள் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.2, நொத்தாரிஸ் வீதி,
நாவலர் வீதி,
அரியாலை.

(23431) (25-15-19)

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 26 | 10 |
| 06 | 10 |
| 1923 | 1994 |



### திருமதி மகேசன் மாணிக்கம்

ஆண்டுகள் ஒன்பதாகி விட்டதம்மா!
ஆறவில்லை எங்கள் துயரம்
நீண்ட தூரம் நீங்கள் சென்று விட்டாலும்
எங்கள் மனதில் உங்கள் நினைவுகள் மாறவில்லை அம்மா!

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்: ம. செல்வரத்தினம்,
ம. பரிமளசிங்கம் (வவுனியா),
ம. இராசரத்தினம் (கிளி ஜேர்மனி)
ம. ஸ்ரீதரன் சுதா (சுவிஸ்),
ம. ஸ்ரீரங்கன்,
சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*ம.ஸ்ரீதரன்,*
*47, நொத்தாரிஸ் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

(25-15-19) (23425)

# இக்கட்டத்திலாவது நீங்கள் விரும்பினால் ஆலோசனை வழங்க, தலைமை தாங்கத் தயார்!

## பிரதமருக்கு ஜனாதிபதி மற்றொரு பதில் கடிதம்



கொழும்பு,ஒக்.10

உங்களுக்கு மட்டுமன்றி, நாட்டுக்கு எது நல்லதென இக்கட்டத்திலாவது உணர நீங்கள் விரும்புவீர்களேயானால், உதவவும் ஆலோசனை வழங்கவும், தலைமை தாங்கவும் நான் தயாராக இருக்கின்றேன்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் ரணிலுக்கு மீண்டும் அனுப்பியிருக்கும் ஒரு பதில் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

11 பக்கங்கள் கொண்ட நீண்ட கடிதமொன்றைப் பிரதமருக்கு எழுதியிருக்கும் ஜனாதிபதி, நாட்டின் பாதுகாப்பு நிலைமையைப் பிரதமர் சிக்கலாக்குகிறார் எனவும் குற்றஞ்சாட்டியிருக்கிறார். தனிப்பட்ட நலன்களை விடுத்து நாட்டின் நலனைப் பேணுமாறும் ஜனாதிபதி அக்கடிதத்தில் கோரியிருக்கிறார்.

ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் விடயங்களில் சில வருமாறு:-

தாங்கள் எனக்கு முன்னர் எழுதிய கடிதம் தேசியப் பாதுகாப்புக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் அச்சுறுத்தலிலிருந்து கவனத்தைத் திசை திருப்பும் ஒரு முயற்சியாகும். படைத் தளபதிகளினதும் பாதுகாப்புப் படையினரதும் தகவல்களின் அடிப்படையில் திருகோணமலை துறைமுகமும் கடற்படைத் தளமும் பெரும் ஆபத்தில் இருக்கின்றன.

திருகோணமலையில் பாதுகாப்பு நிலைமை சீர்கெட்டிருப்பது குறித்து, நாட்டின் தலைவருக்கும் நாட்டு மக்களுக்கும் நிலைமைகளை நீங்களும், உங்கள் பாதுகாப்பு அமைச்சரும், ஊடகப் பேச்சாளரும் (ஜி.எல்.பீரிஸ்) தவறாக எடுத்துக்காட்டியிருக்கிறீர்கள். அரசினதும் நாட்டினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் உங்கள் கடமைகளை நிறைவேற்றவில்லை.

ஓராண்டு சமாதானப் பேச்சின் போது விடுதலைப் புலிகளினால் மூதூர் பகுதியில் முஸ்லிம் மக்கள் மீதான 14 தாக்குதல் சம்பவங்கள் குறித்து அரசு 'கண்மூடி' இருக்கும் விடயத்தை நான் எழுப்பியிருந்தேன்.



கவனத்திலுள்ள பிரச்சினைக்குச் சம்பந்தப்படாத எல்லா வகையான உதாரணங்களையும், நிலைமைகளையும் குறிப்பிட்டு நீங்கள் பதிலளித்திருக்கிறீர்கள். நீங்கள் குறிப்பிட்டிருக்கும் விடயங்கள் குறித்து விளக்கமளிக்க, காலத்தை வீணடிப்பது துரதிர்ஷ்டமானதாகும்.

பாதுகாப்பு அமைச்சருக்கோ அல்லது அவரது செயலாளருக்கோ அறிவிக்காமல் தேசிய பாதுகாப்புச் சபையைக் கூட்டியிருக்கிறேன் என்று கூறுவது தவறாகும்.

- இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (எ)

# அடுத்த ஆண்டில் உரிய திகதிகளில் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள்!

## கட்சி செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு,ஒக்.10

அடுத்த ஆண்டில் உரிய திகதிகளில் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறும். அதனால் இப்பொழுதிருந்தே அத்தேர்தல்களுக்குத் தயாராகுங்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறியிருக்கிறார்.

தொகுதிகள் மட்டத்தில் கட்சிப் புனரமைப்பு பணிகள் குறித்து விளக்கிய ஜனாதிபதி, இன்னமும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாத தொகுதிகளில் அப்பணிகளை விரைவில் பூர்த்திசெய்யும்படியும் கூறியிருக்கிறார்.

# பெரும்போக செய்கைக்கு தென்மராட்சியில் விதைநெல்

தென்மராட்சி,ஒக்.10

தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் 965 நெற்செய்கையாளர்களுக்கு வழங்கவென 2 ஆயிரத்து 100 புசல் விதை நெல்லினை கமநல சேவைகள் திணைக்களம் வழங்கியுள்ளது.

சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் 600 நெற்செய்கையாளர்களுக்கு ஆயிரத்து 200 புசல் விதை நெல்லும் -

கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் 365 நெற்செய்கையாளர்களுக்கு 700 புசல் விதை நெல்லும் வழங்கப்பட்டுவருகின்றது.

உலக உணவு விவசாய நிறுவனத்தின் ஊடான உள்ளீடு வழங்கல் திட்டத்தின்கீழ் இவை வழங்கப்படுவதாகவும் -

இந்த நெற்செய்கையாளர்களுக்கு பசளை வகைகளை விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# பெண்ணிடம் முறைகேடாக நடந்த நபர் கம்பத்தில் கட்டப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஒக்.10

யாழ். நகரப் பகுதி வியாபார நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பெண்ணிடம் முறைகேடாக நடந்த நபர் ஒருவர் அந்த நிறுவனத்தினரால் பிடிக்கப்பட்டு வீதியிலுள்ள மின்கம்பத்தில் மக்கள் பார்வைக்காக கட்டிவைக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது. மின்சார நிலையவீதி, நவீன சந்தைக்கு முன்னால் கட்டிவைக்கப்பட்ட இந்நபரை ஏராளமான மக்கள் பார்வையிட்டனர். சில மணி நேரத்தின் பின் இந்நபர் கலாசாரம் பேணுவோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.(ம-15)

# புதிய முகாம்கள் எதையும் புலிகள் அமைக்கவில்லை; போராளிகளின் எண்ணிக்கையையே அதிகரித்துள்ளார்கள்

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன விளக்கம்

மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளத் தயாராக அரசு உள்ளது. புலிகளின் நடவடிக்கைகளை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். புலிகள் முகாம்களை அதிகரிக்கவில்லை. போராளிகளைத்தான் அதிகரித்துள்ளார்கள். மக்களைப் பாதுகாப்பதற்குப் புதிய இராணுவ உத்திகளை நாம் கையாண்டு வருகின்றோம்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பேசும்போது இப்படித் தெரிவித்தார்.

பாதுகாப்புத் தொடர்பான ஒத்திவைப்புவேளை விவாதத்துக்கு அவர் பதிலளித்துப் பேசும்போது மேலும் கூறியதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின்னர் புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டுள்ளனர் என்பது உண்மை. இருந்தும் நாம் சமாதானத்துக்கு ஒரு நேர்மையான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்கவேண்டியது அவசியமாகும்.

ஆனால், அது புலிகள் செய்யும் அனைத்தையும் பொறுத்துக்கொண்டு, அவர்கள் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள நாம் அனுமதிக்கிறோம் என்று அர்த்தமாகாது.

எதிர்காலத்தில் எந்தவொரு தாக்குதலையும் எதிர்கொள்ள அரசு தயாராக இருக்கிறது. இங்கு உரையாற்றிய பல உறுப்பினர்கள் கடந்த காலப் பின்னடைவுகள் குறித்துப் பேசினர். இது குறித்து நாம் யார் மீதும் குற்றஞ்சுமத்த விரும்பவில்லை. எதிர்மாறான நடவடிக்கைகளுக்கு நாம் எம்மைத் தயார்செய்து கொள்ள வேண்டும்.

யுத்தநிறுத்த காலங்களில் திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் புலிகள் பலம் பெற்றுள்ளனர் என்பது உண்மை. இது ஓர் அச்சுறுத்தல் என்பதும் உண்மை. கடந்த ஐந்து, ஆறு வருடங்களாக திருமலைத்துறைமுகத்துக்கு இந்த அச்சுறுத்தல் இருந்து வருகிறது. 1995 ஆம் ஆண்டு காலகட்டத்தில் பல இராணுவ முகாம்களுடன் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் இப்பகுதியில் நிலை நிறுத்தப்பட்டனர். புலிகள் யாழ். குடாநாட்டைத் தாக்க ஆரம்பித்ததும் ஆயிரக்கணக்கான படையினர் இங்கிருந்து குடாநாட்டுக்கு அனுப்பப்பட்டனர். அதனால் இங்கு இருந்த முகாம்களும் மூடப்பட்டன. யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்ட காலத்திலேயே துறைமுகத்தின் வடக்கிலும் தெற்கிலும் ஆட்லறி சக்தி கொண்ட நான்கு முகாம்கள் இருந்தன. யத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு முன்னைய நிலையும் இதுதான்.

அங்கு, புலிகளின் முகாம்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை.

ஆனால், போராளிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவை குறித்து நாம் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றோம். இருந்தும், நாம் துறைமுகத்தையும் இப்பகுதியில் வாழும் மக்களையும் பாதுகாக்க உரிய இராணுவ உத்திகளைக் கையாண்டுள்ளோம் - இப்படி அவர் கூறினார்.(எ)

### ஸ்தாபக தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.10

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப மற்றும் விவசாய அமைப்பு ஸ்தாபக தினம் நாளை சனிக்கிழமை காலை 9.45 மணிக்கு கல்லூரியின் 'அபெல்ஸ்' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இலங்கை மின்சார சபையின் மாகாண அபிவிருத்திப் பொறியியலாளர் வி.வேலுப்பிள்ளை, சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அதிபர் திருமதி ஏ.வேலுப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-10)

### வவுனியாவில் இன்று தமிழ்ழ பெண்கள் எழுச்சிநாள்

பெண்கள் எழுச்சி நாள் இன்று வவுனியாவில் சிறப்பாகக் கொண்டாடப்படும். புலிகளின் 2 ஆம் லெப்டினண்ட் மாலதியின் 16 ஆவது ஆண்டு நினைவுநாள் இத்தினத்தில் அனுஷ்டிக்கப்படும்.

இந்த நிகழ்வினை வவுனியா மாவட்ட புலிகளின் அரசியல்துறையினர் சிறப்பாக நடத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர். வவுனியா சிறுவர் பூங்காவில் மாலையில் கூட்டம், கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன. (எ)





**வடமராட்சி, கரவெட்டிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.**

**இதில் பேரவையின் கோட்டத் தலைவர் எஸ்.தர்மலிங்கம் உரையாற்றுவதையும் எழுச்சிப் பேரவையின் வடமராட்சிக் கோட்டச் செயலாளர் துரை.சத்தியசீலன், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேகுராஜா உட்பட நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.** *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# மெல்லக் கற்கும் மாணவர் விவரம் தீவகத்தில் சேகரிப்பு

மண்டைதீவு,ஒக்.10

தீவுப்பகுதிப் பாடசாலைகளில் உடற்குறைபாடு உடைய மாணவர்களின் விவரத்தைப் பாடசாலை அதிபர்களிடம் இருந்து தீவக வலயக் கல்விப்பணிமனை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, திக்குவாய், வாய்பேச முடியாத மற்றும் மூளை வளர்ச்சி குறைந்த மெல்லக் கற்கும் மாணவர்களின் விவரமே அவ்வாறு கோரப்பட்டுள்ளது.

தரம் 3இல் இருந்து தரம் 9வரையான வகுப்புகளில் எழுத, வாசிக்கத் தெரியாத மாணவர்களிற்கு விசேட கல்வித் திட்டத்தை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த விசேட கல்வித் திட்டத்தின் கீழ் போதிக்கக்கூடிய ஆசிரியர்களின் விவரமும் வலயத் திணைக்களத்தால் திரட்டப்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு, மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ள சகல வலயங்களிலும் இருந்து இந்த விவரங்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-68)

# தென்னந்தோட்ட உரிமையாளர்களை அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது

## தெங்கு செய்கையாளர் சாங்கத் தலைவர் கவலை

யாழ்ப்பாணம்,ஒக்.10

தென்னிலங்கையைச் சேர்ந்த தேயிலைத்தோட்ட உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு உரிய இழப்பீடுகளை வழங்கும் அரசு, வடபகுதியில் அழிவடைந்த தென்னந்தோட்டங்களின் உரிமையாளர்களுக்கு இதுவரை எந்தவிதமான நஷ்டஈடுகளையும் வழங்கவில்லை.

இவ்வாறு தமிழ் மக்களை அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவது எமக்கு பெரும் வேதனையை அளிக்கிறது என்று வட மாகாண தெங்குச் செய்கையாளர் சங்கத் தலைவர் அநல்லதம்பி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடபகுதி மக்களின் பிரதான வளங்களில் ஒன்றாக விளங்கிய தென்னந்தோட்டங்கள் கடந்தகால போரினால் மிகவும் கடுமையாக அழிவடைந்துள்ளன. குறிப்பாக தென்மராட்சிப் பிரதேசத்தில் கிளாலி, எழுதுமட்டுவாழ், முகமாலை ஆகிய பகுதிகளிலுள்ள பல தோட்டங்கள் முற்றாக அழிந்துள்ளன.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது குடாநாட்டில் 5 லட்சம் தென்னைமரங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான ஏக்கர் தென்னந்தோட்டங்கள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன.

தென்மராட்சியிலுள்ள பல தென்னந்தோட்டங்களில் கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள் இன்னமும் அகற்றப்படவில்லை.

வடபகுதியில் முன்பு சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தென்னையை மையமாகக் கொண்டு தொழில் செய்து வாழ்க்கை நடத்தினார்கள்.

அவர்கள் இப்பொழுது தொழில் வாய்ப்புக்கள் குன்றி மிகுந்த சிரமப்படுகின்றார்கள். தென்னை அழிவுகளுக்கு நஷ்டஈடுகளை வழங்குவதுடன், அவற்றின் மீள்நடுகைக்கு வேண்டிய உதவிகளை செய்யுமாறும் -

தோட்டங்களிலுள்ள வெடிபொருள்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பல தடவைகள் தென்னை அபிவிருத்திச் சபையிடமும் அரசாங்கத்திடமும் கோரிக்கை விடுத்தோம்.

ஆனால், இதுவரை அவ்வாறு எதுவுமே செய்யப்படவில்லை.

ஈராக் யுத்தத்தினால் தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்காக தென்னிலங்கையின் தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நஷ்டஈடாக 50 கோடி ரூபாவை அரசு வழங்கியது. ஆனால் உள்நாட்டுப் போரினால் தமது வளங்கள் யாவும் நிர்மூலமாக்கப்பட்ட நிலையில் ஏதிலிகளாக வாழும் வடபகுதி தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கும் அதனை நம்பி வாழ்ந்து வந்த தொழிலாளர்களுக்கும் இதுவரை எந்த நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லை. இது மிகவும் வேதனை தருகின்ற விடயமாகும்.

இந்த விடயம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டிருக்கின்றது - என்று தெரிவித்தார். (ம-4)

# ஜே.வி.பி. வேட்பாளர் ஏக்கலையில் கைது

ஜா-எல, ஏக்கலையிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் நடந்த கொள்ளை முயற்சியின்போது கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஜே.வி.பி. வேட்பாளர் என்பது தெரிய வந்திருக்கிறது.

பிபில பிரதேசத்தைச் சேர்ந்த அவர், ஜா-எல பிரதேச சபைத் தேர்தலில் ஜே.வி.பி. அபேட்சகராகப் போட்டியிட்டு தோல்வியடைந்தவராவார்.

ஆடைத் தொழிற்சாலைகள் பலவற்றில் இதற்கு முன்னர் பொருள்களைக் கொள்ளையடித்தில் இவர் சம்பந்தப்பட்டிருக்கின்றார் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கியைக் காட்டி காவலாளிகளைப் பயமுறுத்திய கொள்ளையர்கள் தொழிற்சாலையின் கூரையைப் பிரித்து உள்ளே நுழைந்து கொள்ளையிட்டபோதே பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர். (எ)


யாழ்-கொழும்பு போக்குவரத்து சேவை

தினசரி யாழ்-கொழும்பு பயணிகள் வான் சேவையும் (பயணிகள் கட்டணம் 900/=) லொறியில் பொருட்கள் அனுப்பும் சேவைகளை நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஒழுங்குபடுத்தலாம்

ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்

| கொடிகாமம் வீதி, நெல்லியடி | கொட்டாஞ்சேனை கொழும்பு - 13 |
|---|---|
| 021-226-3500 | 01-2478444 |
| 0777-271478 | 01-2478443 |


## துயர் பகிர்கிறோம்

### திருமதி ஆறுமுகம் பூரணம்
*(குஞ்சக்கா)*

நவிண்டில், குளவியடி அம்மன் ஆலய சூழலைப் பிறப்பிடமாகவும், இல.32, காசில்லேன், பம்பலப்பிட்டியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி ஆறுமுகம் பூரணம்** அவர்கள் 08.10.2003 புதன்கிழமை அதிகாலை இயற்கை மரணம் எய்தியுள்ளார்.

அன்னார் மு.க. ஆறுமுகம் (கிளாக்கர்) அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாரோடு நாமும் இணைந்து கொள்கின்றோம்.

மருதம் நிறுவனம்,
நெல்லியடி.

(C/30627) (26-24-15-19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
05
உ
06
உ
1972



விண்ணில்
10
உ
09
உ
2003

### அமரர் பாலசிங்கம் விஜயபாலா

மணமாலை வாடமுன் விண்ணுலகம் சென்றவரே!
குணவதி உன்னைவிட்டு குமுறுகின்றாள் இங்கு
ஆண்டவன் அருளோடு இம்மண்ணில் - நீ
மீண்டும் பிறக்கவேண்டும் எதிர்பார்த்திருப்போம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*போயிட்டி,*
*நீர்வேலி.*

என்றும் மறவாத:
அன்பு மனைவி தங்கமணி,
பாசமுள்ள அம்மா, அப்பா,
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

(23473) (26-24-15-19)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூரணம் ஆறுமுகம் *(குஞ்சக்கா)*

(கரணவாய் மத்தி, நவிண்டில்)

கரணவாய் மத்தி - குளவியடி அம்மன் கோயில், நவிண்டிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது காசில் வீதி, **No:32, Colombo - 04** இல் வசித்து வந்தவருமான ஆறுமுகம் பூரணம் 08.10.2003 இல் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் பிரபல சட்டத்தரணி லிகிதர் மு.க.ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் பிரபா (சுவிஸ்), ரவீந்திரன் (லண்டன்), சபேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாஸ்கரன், காலஞ்சென்ற ரத்தினேஸ்வரி, ராதா ஆகியோரின் அன்பு மாமியும் கந்தசாமியினதும், காலஞ்சென்ற ராசாம்மாவினதும் உடன்பிறந்த சகோதரியும் கெங்காதேவி, கெங்காதரன், மங்கையர்க்கரசி, ரதிதேவி ஆகியோரின் சிறிய தாயாரும் ரஞ்சி, கிரி, தவம், சிறி, பட்டு, ஜெயா ஆகியோரின் மாமியாரும் மினோலினி, காயத்திரி, ஜசுசன், சாருகா, கிருஸ்ணதாஸ், விஜிதா, விஜயதாஸ், திவாகரன், லாவினன், சஞ்சிதன், சாருகன், ஜனகன், அனுசன், தனுசன், கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனுஜனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.10.2003) வெள்ளிக்கிழமை அவரது நவிண்டில் இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டு, தகனக்கிரியைகளுக்காக மாலை 4.00 மணியளவில் எள்ளங்குளம் இந்துமயானத்திற்கு (நவிண்டில்) எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
ஆ.சபேசன் *(மகன்)*

(சி-30626) (26-24-15-19)

### தில்லைநடராசா விக்கினேஸ்வரன் (ரகு)

திருநெல்வேலி வளாக ஒழுங்கையைச் சேர்ந்த தில்லைநடராசா (வெள்ளைக்கண்டு) - சிவபாக்கியம் தம்பதியரின் புதல்வன் விக்கினேஸ்வரன் 08.10.2003 அன்று நெதர்லாந்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் கருணாதேவி, ஜெயரட்ணம், சிறீகரன், ஜெகதீஸ்வரன், சுகேந்திரன் ஆகியோரின் சகோதரனும் கதிர்காமசிங்கம், சுலோசனாதேவி, பிரேமிளா ஆகியோரின் மைத்துனரும் கஜேந்தினி, நிசாந்தன், நிரோசினி ஆகியோரின் மாமனாரும் நிரஞ்சினி, தர்சினி, ஸ்ரீநிரஞ்சன், மயூரி ஆகியோரின் சித்தப்பாவும் தாரணியின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நெதர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*வளாக வீதி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
இ.கதிர்காமசிங்கம் *(மைத்துனர்)*.

(சி-30626) (26-24-15-11)


**Department of English,**
**Psalm Institute of Engineering and Technology**
இனால் நடத்தப்படும்

## தேசிய ஆங்கில டிப்ளோமா

நாடு தழுவிய பொதுப் பரீட்சை: **May 2004**

வீட்டிலிருந்து யாரும் இலகுவாக கற்கக்கூடியதான 24 புத்தகங்கள் கொண்ட பாடநெறிக்கான மொத்த கட்டணம் ரூபா 500/= மட்டுமே. விண்ணப்ப முடிவுதிகதி: 20.10.2003

பாடநெறிகள்:

1. NDET : ஆசிரியர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறி
2. NDEW : வேலை செய்வோருக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறி
3. NDEC : பொதுவான தொடர்பாடலுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறி

சுயவிவரங்கள் மற்றும் தெரிவுசெய்யும் பாடநெறி அடங்கிய விண்ணப்பம் மற்றும் ரூபா 500/= இற்கான காசுக்கட்டளையினை அனுப்பவேண்டிய முகவரி:

**Psalm Institute of Engineering and Technology**
**22-1/3, Galle Road, Dehiwala.**

காசுக்கட்டளை "PSALMS TECHNOLOGIES" என்ற பெயரிற்கு "DEHIWALA" தபாலகத்தில் மாற்றத்தக்கதாக எடுக்கவேண்டும்.

(23468) (24-15-19) **- Director.**


இலங்கை அரசு
வடக்கு - கிழக்கு மாகாணம்
வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
கடன் இல.: 2880 - சீ.ஈ. (C.E.)

## தேசியப் போட்டிக் கூறுவிலை கோரல்

(நிர்மாண வேலைகள்)

## கேள்வி அறிவித்தல் - ஐ.எவ்.பி. (I.F.B.)

ஐ.எப்.பி.இல.: கிளி/நிர்ப்/02 திகதி: 10.10.2003

01. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D.) கடன் வசதி, ஐ.டி.ஏ. (I.D.A.) நம்பிக்கையின் கீழான வசதி.

02. *அரசாங்க அதிபர், கிளிநொச்சி, இலங்கை* அவர்களால், மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.

03. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான, *அரசாங்க அதிபர், கிளிநொச்சி* என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் *பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி* அவர்களிடமிருந்து 11.11.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை *பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில* இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம எந்திரி,**
**மாகாண கட்டடங்கள் திணைக்களம்,**
**பழையகமம், முரசுமோட்டை,**
**பரந்தன், கிளிநொச்சி.**

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், *அரசாங்க அதிபர், கிளிநொச்சி* என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, பின்வரும் முகவரிக்கு 11.11.2003 பிற்பகல் 3.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**கேள்விச் சபை,**
**மாவட்ட செயலகம்,**
**கச்சேரி,**
**கிளிநொச்சி.**

அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில், காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின், அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விவரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல. | வேலை விவரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கிளி/நிர்ப்/உவி/3 | உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகம் மீள்நிர்மாணம், கிளிநொச்சி | 120,000/- | 1000/- | 05 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/பிசெ/4 | ஓர் பதவிநிலை உத்தியோகத்தர் விடுதி மீள்நிர்மாணம், மாவட்ட செயலகம், கிளிநொச்சி | 43,500/- | 750/- | 03 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/கதி/5 | பிரதம எந்திரி அலுவலக கட்டடம், கட்டடங்கள் திணைக்களம், மீள் நிர்மாணம் கிளிநொச்சி. | 51,400/- | 750/- | 03 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/பிசெ/6 | பிரதேச செயலகம் மீள்நிர்மாணம், பளை | 249,500/- | 1000/- | 10 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/சுவே/7 | சத்திர சிகிச்சைக் கூடமும், வாட்டிற்கு ஒடுங்கு பாதையும் மீள்நிர்மாணம், மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி | 100,400/- | 1000/- | 05 மாதங்கள் |
| கிளி/நிர்ப்/சுவே/8 | 14 படுக்கைகள் கொண்ட பிரசவ வாட்டும், பிரசவ அறையும், மீள்நிர்மாணம், மத்திய மருந்தகம், உருத்திரபுரம் | 105,300/- | 1000/- | 05 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள் கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 04 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

இந்த கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும் போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்துக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல்வேண்டும்.

**தி.இராசநாயகம்**
அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

(சி-30590) (24-15-19)

(மிகுதி 11ஆம் பக்கம் பார்க்க)

# சிறு இயந்திரம் பூட்டிய சைக்கிள் மிக வேகமாக ஓடிக் கலகலப்பு!

## மரமேறித் தேங்காய் பிடுங்கும் இயந்திரத்தைத் தந்த நிரஞ்சனின் சாதனை



ரி.என்.எல்.தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் நிரஞ்சன் வீரக்கோனை (இடமிருந்து இரண்டாவது) அவரது உதவியாளர்களுடன், அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து நான்காவதாக மொழிபெயர்ப்பாளர் சட்டத்தரணி க.குணரத்னம் காணப்படுகின்றார்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரி.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர நிகழ்ச்சியில் கடந்த 07ஆம் திகதி தோன்றி, தமது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் நிரஞ்சன் வீரக்கோன்.

இலங்கையில் நவீன சாதனங்களை உற்பத்தி செய்யும் இளைஞர் இருக்கின்றனர். சாதாரண சைக்கிளில் ஒரு சிறு இயந்திரத்தைப் பொருத்துவதன் மூலம் மோட்டார் சைக்கிளைப் போல் அதனை ஓடக் கூடியதாக இளைஞர் நிரஞ்சன் வீரக்கோன் மாற்றி யமைத்தார்.

அந்த இளைஞரின் உற்பத்திகளைத் தயாரிக்கவும், சந்தைப்படுத்தவும் சிலிங்கோ நிறுவனம் பேருதவி புரிகின்றது. இந்த இளைஞர் விலங்கியல் துறையில் பட்டம பெற்றிருந்தாலும் இயந்திராதிகளை உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றார்.

இவரை தொழில் அதிபர் தேசமான்ய லலித் கொத்தலாவல, நிர்வாக இயக்குநராக நியமித்து சிலிங்கோ நிரஞ்ஷின் இன்வென்சன்ஸ் என்ற நிறுவனத்தை ஆரம்பித்துள்ளார்.

ரி.என்.எல். தொலைக்காட்சயில் தொழில்அதிர் நிரஞ்சன் வரக்கோனை, அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

*செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.*

*கேள்வி:* நீங்கள் பொலித்தீன் மூலம பெற்றோல் தயாரிக்கும் வழியை கண்டு பிடித்தீர்கள் மற்றும் தென்னை மரத்தில் ஏறி தேங்காய்களை பறிக்கும் இயந்திரமொன்றையும் கண்டுபிடித்துள்ளீர்கள். நீங்கள் இந்தத் துறைகளில் எவ்வாறு ஈடுபட்டீர்கள் என்று விளக்க முடியுமா?

*பதில்:* நான் சிறு வயதிலிருந்தே இயந்திரங்கள் மீது அலாதி விருப்பம் கொண்டிருந்தேன். விமானம் பறக்கும போது எழுப்பும் சப்தம், இயந்திரங்கள இயங்கும் போது எழுப்பும் சப்தம், ஆகியவற்றைக் கேட்பதில் எனக்கு மிக விருப்பம். நான் இயந்திரங்களை ஆராய்வேன். பாவனையிலிருக்கும் இயந்திரங்களைத் தயாரிப்பதை விட புதிய இயந்திரங்களைத் தயாரிப்பதிலேயே எனது கவனம் திரும்பியது.

*கேள்வி:* புதிய உற்பத்திகளைக் கண்டு பிடிப்பவர்களுக்கு இந்நாட்டில் எவரும் உதவ முன்வருவதில்லை. அப்படியிருக்கும்போது உங்களுக்கு மாத்திரம் உதவிபுரிய தேசமான்ய லலித் கொத்தலாவல முன்வந்தது எப்படி?

*பதில்:* நான் பல்கலைக்கழகத்தில பயிலும்போதே தேசமான்ய லலித் கொத்தலாவலயை சந்திக்க முயற்சித்தேன். அவரது முகவரியை என்னால் பெற முடியவில்லை.

தேங்காய் பறிக்கும் இயந்திரத்தை நான் கண்டுபிடித்த பின்னர் எனது பெயர் பிரபலமானது. இந்தவேளையில் தேசமான்ய லலித் கொத்தலாவல புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையில் 'தருண அருண' என்ற வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் ஒருவர் என்வீடு தேடிவந்து ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமாறு வேண்டினார். நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய பின்னர் அவர் தேசமான்ய லலித் கொத்தலாவலவிடம் என்னை அறிமுகப்படுத்தினார். நான் எனது உற்பத்திகள் அனைத்தையும் நான் பெற்ற விருதுகளையும் அவருடைய பார்வைக்கு வைத்தேன்.

இலங்கை மக்களுக்கு சிறு இயந்திரம் மூலம் ஓடும் சைக்கிள் பிரயோசனமாக இருக்கும் என்று அவர் தீர்மானித்து உடனடியாக சிலிங்கோ நிரஞ்சன் இன்வென்ஷன் என்ற கம்பனியை ஆரம்பித்து என்னை உயர் நிலைக்குக் கொண்டு வந்தார்.

*கேள்வி:* சிறு இயந்திரம் பொருத்திய சைக்கிள்களின் விற்பனை எப்படி இருக்கின்றது?

சிலிங்கோ நிரஞ்சன் இன்வென்ஷின் நிறுவன பொதுமுகாமையாளர் ஏ.எஸ். ஜயதிஸ்ஸ.

முதன்முதலாக தயாரித்து வெளிவந்த 100 சைக்கிள்களும் விற்பனையாகிவிட்டன. எங்களுக்கு நாடு முழுவதும் 15முகவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த சைக்கிளுக்கு சந்தையில் நல்ல கிராக்கி இருக்கின்றது. இதன் விலை சுமார் 18 ஆயிரம் ரூபா மட்டுமே. அடுத்ததொகை சைக்கிள்கள் இன்னும் ஒரு சில தினங்களில் சந்தைக்கு வந்துவிடும்.

*கேள்வி:* இந்தச் சைக்கிள் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு எத்தனை கிலோமீற்றர் ஓடும்?

*பதில்:* சைக்கிளில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரம் ஜப்பான் 'சாலி' மோட்டார் சைக்கிளைப் போன்ற சக்தி கொண்டது. ஒரு லீற்றர் பெற்றோலில 90 கிலோமீற்றர் வரை ஓடக்கூடிய சக்தி பெற்றது. ஒருமணிநேரத்தில் 60 கிலோமீற்றர் வேகத்தில் இச்சைக்கிள் மூலம் பயணம் செய்யலாம்.

*கேள்வி:* இது சாதாரண சைக்கிளைப் போன்றதா அல்லது அதை விட சக்தி மிக்கதா?

*பதில்:* இது அலாதி சக்தி கொண்டது. மலைப்பகுதிகளில்கூட மூன்று பேரை ஏற்றிக்கொண்டு செல்லும் சக்தி கொண்டது.

*லலித் கொத்தலாவல:* இப்போது உங்கள் வர்த்தகம் எவ்வாறு நடக்கின்றது?

*பதில்:* இயந்திரம் பொருத்தப்பட்ட இந்தச் சைக்கிள் இப்போது இலங்கையில் பிரபலமாகிக்கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு சில வருடங்களில் இச்சைக்கிள் மக்களின் ஜனரஞ்சக வாகனமாக மாறிவிடும் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது. பாடசாலை பிள்ளைகள், ஆசிரியர்கள், கிராமசேவகர்கள், தபால் விநியோகிப்போர், விவசாயிகள், சுவீப் ரிக்கட் விற்பவர்கள் மத்தியில் இந்தச் சைக்கிள் பிரபலமாகத் தொடங்கி விட்டது. இந்தச் சைக்கிளின் விலை பெறுமதி சேர்க்கப்பட்ட வரியுடன் 17,990 ரூபாவாகும். எமது ஊறுகொடவத்த களஞ்சியசாலையில் இச்சைக்கிளைக் கொள்வனவு செய்யலாம்.

- இவ்வாறு கூறினார் நிரஞ்சன் வீரக்கோன்.

---

# "ஆசை அறுமின், ஆசை அறுமின் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்"

*ஆசையெனும் வழிப்பட்டு அலைந்து துன்ப அவலத்தில் மாட்டி நிதம் அவலப்பட்டு.*

*ஓசையெலாம் அடங்கி உயிர் உழன்று வாழ்வில் உயிர்ப்பற்று ஆன்மசுகம் இழந்து சாவார்.*

மேலுள்ள பாடல் ஆசைக் கடலுள அமிழ்ந்து வாழும் மக்களின் அங்கலாய்ப்புகளை வெளிக்கொணர்கின்றது. ஐம்பூதச் சேர்க்கையால் உருவான மனிதனை மெய்,வாய்,கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களும், நம்பிக்கை என்ற அச்சாணி கொண்ட வாழ்க்கைச் சக்கரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் போது ஆசையெனும் அழிவுப்பாதையில் அவனைக் குடை சாய்த்து விடுகின்றன. பிறந்தவுடன் எல்லாவற்றையும் சுவைக்கவேண்டுமென்ற ஆசை, வயது ஏறஏற இந்தச் சுவைகளை எல்லாம் எப்படி விட்டுப் போவது, இறவாமலேயே இருந்துவிடலாமே என்ற ஆசை மரணம் நிச்சயமானது என்ற நிலை வந்ததும் அதற்குள்ளே எல்லாவற்றையும் அனுபவித்துவிட வேண்டும் என்ற ஆசை. இதனால் மனிதன் சுகபோகங்களில் புரண்டு இயற்கையான மரணத்தின் முன்பே ரோகங்களில் கிடந்து அழிந்து போகின்றான்.

குழந்தைப் பருவத்தில் ஏற்படும் ஆசைகள் பருவம் மாறும்போது மறைந்து போகின்றன என்றாலும் கட்டிளமைப்பருவத்தில் அவற்றுள் சில நிலை பெறுகின்றன. எல்லோரும் எல்லாவற்றிலும் மேலாக தமது உடலையே நேசிக்கின்றனர். கட்டிளமைப் பருவத்தினர் உடலோம்பலில் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர்.

அவற்றை அழகுபடுத்தும் ஆவலமிகுகிறது. இதனால் ஆண், பெண்களிடையே கவர்ச்சி ஏற்படுகிறது. நறுமணமுள்ள, அழகான தேன் நிறைந்துள்ள மலர்களைத்தானே வண்டுகள் நாடிச் செல்கின்றன. அதேபோல் கவர்ச்சியுள்ள ஆண்கள், பெண்களிடையே ஈர்ப்பு ஏற்படுகின்றது. இந்தப் பாலியல ஆசையால் முனிவர்களும், ஞானிகளும், பத்தினிகளும், தேவகன்னியரும் பாதைமாறிய பரிதாபங்களை, இலக்கியங்களிலும், புராணங்களிலும கூட நாம் காணலாம். உயிர் கொல்லி நோய் உலகெலாம் காணப்படும் இவ்வேளையிலும் இந்த ஆசை ஓங்கி நிற்கிறது.

அடுத்தது மண்ணாசை. தத்தமது காணிகளின் வேலிகளை அடைக்கும் போதெல்லம், எப்ப அடுத்தவன் காணியைப் பிடிக்கலாமென்று எல்லையைத் தள்ளிப்போட்டு விடுகின்றார்கள். அடுத்தவர் வீடுகளிலும் நிலபுலங்களிலும் குடியேறி அடாத்துப் பண்ணுகிறார்கள். எதைக்கொண்டு வந்தார்கள் இவர்கள் எடுப்பதற்கு? எல்லாம் இங்கே உள்ளவைதானே! என்றோ ஒருநாள் இங்கேயே விட்டுவிட்டுப் போகப்போகின்றார்கள். "நம்மதென்று நாமிருக்க நாய் நரிகள் பேய் கழுகு தம்மதென்று தாமிருக்கும் "இந்த உடம்பையே ஒரு நாள் விட்டுவிட்டுப் போகப் போகின்றோமே!

"குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்

நடைமெலிந்து ஓர்ஊர் நண்ணினும் நண்ணுவர்" அல்லவா?

அடுத்தது பொருள் ஆசை "பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்பார்கள்". ஆனாலும் பொருளைத் தேடும் வழிகளை அறிந்து தீயவழிகளிலன்றி நல்ல வழியில் தேடப்படும் பொருளே ஒருவருக்கு அறத்தையும் இன்பத்தையும் தரும். குறுக்கு வழிகளில்தான் அதிகமாக மக்கள் பொருளைத் தேட ஆசைப்படுகிறார்கள். இப்படித் தேடிய பணவலுவால் மண்ணைப் பெண்ணைப் புகழைப் பணம் கொடுத்துப் பற்றிக் கொள்கிறார்கள். இதனால் அகங்காரமும், அடாவடித்தனமும் அவர்களிடம் தொற்றிக்கொள்கின்றன.

இத்தகைய ஆசைகள் வழியே அலைபவர்களுக்கு இறக்கும்வரை திருப்தியே வருவதில்லை. ஆசைகள் எங்கு அடங்குகின்றனவோ அங்கேதான சுயதரிசனம் உண்டாகும்போது இறை தரிசனத்தில் முனைப்பு ஏற்படுகின்றது. "காதற்ற ஊசியும் வாராது கடைவழிக்கே" என்ற அனுபவஞானம் உண்டாகின்றது.

ஆசைகள் அற்ற இடத்தில்தான் குற்றங்கள் அற்றுப்போகின்றன. அங்கேதான் பற்றற்ற வாழ்வு தொடங்குகின்றது.

எனவே, 'ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்'. ◆

நாக. சண்முகநாதபிள்ளை

ஞானக்கதிர்

---

# பாதீனியம் களையை ஒழிக்க வலி.தெற்கில் தீவிர நடவடிக்கை

வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் எதிர்வரும் ஞாயிறு மற்றும் திங்கட் கிழமைகளில் பாதீனியம்செடி அழிப்பு வேலைகள் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

உடுவில் கமநலசேவை நிலையமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து விவசாய சங்கங்களுடாக பாதீனியச் செடிகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட உள்ளன.

இது தொடர்பாக உடுவில் கமநல சேவை நிலையத்தில் விவசாய பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகள் சங்க உறுப்பினர்கள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உடுவில் பிரதேச இணைப்பாளர் சி.செந்தில்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த இரண்டு வருடங்களாக உடுவில் கமநலசேவை நிலையத்தினரால் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம், விவசாயிகள் சங்கங்கள் ஆகியவற்றின் உதவியுடன் பாதீனியம் அழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன.

பலதடவைகள் களைக்கொல்லி மருந்துகளைப் பிரயோகித்தும் கட்டுப்படுத்தமுடியாத அளவில் வலிகாமம் பிரதேசத்தில் வளர்ந்துள்ள பாதீனியத்தை முதல் நடவடிக்கையாக பிடுங்கி அழிக்கவும், மழையைத் தொடர்ந்து வளரும் பாதீனியத்தை மருந்து அடித்து முற்றாக ஒழிக்கவும் இம்முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் பாதீனியம் அழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு நான்கு மணித்தியால சேவைக்காக இரண்டரைக் கிலோ அரிசி, 300கிராம் சீனி, 150கிராம் பருப்பு, தகரத்தில் அடைத்த மீன் என்பன ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட உள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வுலருணவுப்பொருள்கள் கூட்டுறவுக்கடைகள் மூலம் வழங்கப்படும்.

குப்பிளான் தெற்கு, ஈவினை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, இணுவில் மேற்கு, இணுவில் வடகிழக்கு, உடுவில வடமத்தி, உடுவில் மத்தி, உடுவில் கிழக்கு ஆகிய இடங்களில் சுமார் 75 ஹெக்டேயர் பரப்பளவில் பாதீனியம் வளர்ந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கால்நடைகளுக்கு மட்டுமன்றி பூமிக்கும் மனிதருக்கும் கேடு விளைவிக்கக்கூடிய இச்செடியை எமது பிரதேசத்தில் இருந்து முற்றாக ஒழிக்க வேண்டும் என்றும் -

இதற்கு விவசாயக் கழகங்கள் தத்தம் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்கள், மகளிர் நிலையங்கள், பொதுமக்கள் போன்றோரை உள்ளடக்கி பாதீனியம் ஒழிப்புப்பணியை மேற்கொள்ளவேண்டும் என்றும் - பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உடுவில் பிரதேச இணைப்பாளர் சி.செந்தில் செல்வன் விவசாய சங்கத்தினருக்கு அறிவித்துள்ளார்.

இம்மாதம் [illegible]ஆம் திகதிக்கு முன் [illegible] இப்பணிகள் யாவற்றையும் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளன.(ஏ-152)

---

# விதை உருளைக்கிழங்கை பெற்றுத்தரக் கோரிக்கை

வலிகாமம் தெற்கு,ஒக்10

இந்த வருட உருளைக்கிழங்கு செய்கைக்கு வேண்டிய விதை உருளைக்கிழங்கை கமநலசேவை நிலையத்தினூடாகப் பெற்றுத்தருமாறு உடுவில் கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தியோகத்தரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உடுவில் கமநலகேந்திர நிலையத்தில் இடம்பெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்துகொண்ட உடுவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாய கழகங்களின் உறுப்பினர்களால் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடங்களில் இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கை கமநலசேவை நிலையத்தினூடாக வழங்கி அதன் மூலம் உருளைக்கிழங்கை அதிக அளவில் உற்பத்தி செய்து விவசாயிகள் நன்மையடைந்தனர். அதேபோல, இவ்வருடமும் கமநலசேவை நிலையங்களூடாக தமக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கை பெற்றுத்தருமாறு விவசாயிகள் கேட்டுள்ளனர்.(ஏ-152)

# கவிமாமணிக்கெந்தன் கவிதாஞ்சலிப் பூக்கள்

செந்தமிழும் சைவமதம் சீலம் யாவும்
செழித்தோங்கும் யாழ்ப்பாணத் திலக மாக
வந்தமிழ்தம் வளம் கொளித்த வாழ்வு தன்னில்
வன்தமிழில் கவிதைகளை வடித்துத்தந்த
நந்தமிழின் நற்கவிஞர் நானி லத்தில்
ந.வீரமணிஐயர் நம்மை விட்டு
சிந்தைநிறை தமிழ் எண்ணம் கொண்ட செம்மல்
சிவபதத்தை பெற்றாரே பெறுக சாந்தி!

சந்ததங்கள் போற்றி நிற்க சரித்திரத்தில்
ஸாஹித்ய ஸாகரமே சரிந்ததேனோ?
விந்தைபுரி தமிழில் மஹாவித்துவானாய்
விவேகமுடன் விளைத்த கவி மாவீரமணி
கந்தனுறை தமிழ்க்கவிமா மணிக்கு வேந்தன்
கவிதாஞ்ச லிப்பூக்கள் காணிக்கையாக
வந்தனங்கள் கூறி உம்மை வணங்குகின்றேன்
வளமார்ந்த சிவபதத்தில் பெறுக சாந்தி!

நேற்றுமுன்தினம் சிவபதமெய்திய என்னுடைய மானசீகக்குரு கவிமாமணி இணுவையூர் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்களுக்கு எனது அஞ்சலியை தெரிவிப்பதோடு, அவருடைய ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. — சிஷ்யன் கு.புரந்தரன்.

(C-30617)(12-16)

---

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை

## 175ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் வெளியீட்டு விழா

நாளை (11-10-2003) சனிக்கிழமை காலை 10மணிக்கு நடைபெறும் மலர் வெளியீட்டு விழாவிலே அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

(C-30631)(12-16)

---



நோயிலும் நுடங்காது சேவையாற்றும் பாசத்தின் சிகரம்
க.மனோகர் J.P. ஆசிரியர்
சமாதான நீதிவான் பட்டம் பெற்றமைக்கான

பாராட்டுவிழா

இடம்: மூளாய் பிரசாத் மண்டபம் (பிள்ளையார்கோவிலுக்கு அருகில்)

காலம்: நாளை (11-10-2003) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி

கலைநிகழ்வுகளும் விசேட பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-றெமிங்ரன் சமூகம்.

(சி-30630)(12-16)

---

# மரண அறிவித்தல்

## முத்துச்சாமி ஜெயறஞ்சித் (ஜெயா)

ஏழாலை தெற்கு, விழுசிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி ஜெயறஞ்சித் அவர்கள் நேற்று (09.10.2003) வியாழக்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் முத்துச்சாமி-மங்கையர்க்கரசியின் அன்பு மகனும் பரமசவுந்தரியின் அன்புக் கணவரும் அநோஜன், றொசான், கிந்துஜா, றுக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவப்பிரகாசம் பாலசிங்கத்தின் மருமகனும் S.நாகராஜா (Australia), P.சுப்பிரமணியம் ஆகியோரின் பெறாமகனும் றஜனி (கொழும்பு), லண்டனில் வசிக்கும் சிறிறஞ்சித், உதயறஞ்சித், தேவறஞ்சித் ஆகியோரின் சகோதரனும் M.C.M. இக்பால் இந்திரா (கொழும்பு), லண்டனில் வசிக்கும் இந்திரா, தர்சினி, றேணுகா (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் சௌமியா, தேவஜன், அபிசேக் ஆகியோரின் பெரியதந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுக்கொள்கிறோம்.

பரமசவுந்தரி (மனைவி),
ANDERSOS FLATS,
NARAHENPITTA.
T.P.: 012 590588,
0777 170402.

தகவல்:
சி.பாலசிங்கம் (மாமனார்),
ஏழாலை தெற்கு,
விழுசிட்டி,
சுன்னாகம்.

(23483)(12-16)

---

## சுகாதார கல்விப் பயிற்சிப் பட்டறை


பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 'யௌவனப் பராய இனப் பெருக்க சுகாதார கல்விப் பயிற்சிப் பட்டறை' எதிர்வரும் 15ஆம் திகதி புதன கிழமை காலை 9மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. முதலாம் வருட மாணவர்களுக்கான களப்பயிற்சி அங்கு இடம் பெறவுள்ளதாகவும் - அனைத்து முதலாம் வருட மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி கேட்டுள்ளார்.

## கலை விழா

தீபாவளியை முன்னிட்டு ஹப்புத்தளை திருமறைக் கலாமன்றம் நடத்தும கலைவிழா, எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் 2.30மணிக்கு பண்டாரவளை நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள ளது. இதில்இலங்கையின் பல பாகங்க ளிலிருந்தும் திருமறைக் கலாமன்றப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

---

# தன்னலமற்ற சேவைக்கு கிடைத்த பதவி



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர்

திரு.த.மகாசிவம்

சார்க் பிராந்திய ஆசிரிய சங்கங்களின் தலைவராக
ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டமை
அவரது தன்னலமற்ற சேவைக்கும்
அனைத்து தமிழர் ஆசிரியர்களுக்கும்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும்
சர்வதேச ரீதியாகக் கிடைத்த பெரும் சிறப்பாகும்.
தொழிற்சங்க சேவையில் இருபத்தைந்து வருடங்களைப்
பூர்த்திசெய்து வெற்றி நடைபோடும் அவரைப் பாராட்டி
பெருமிதம் அடைகின்றோம்.

"ஒற்றுமையே எமது பலம்"

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க அங்கத்தவர்கள்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/30628) (29-12-16)

---


PRINCE

துருபிடிக்காத உலோக கிச்சன் சிங்க்

பிரின்ஸ்

நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சிங்குகளைவிட விசேஷமானது.



ஏக விநியோகஸ்தர்கள்

சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்

காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 2324261-5, 2337383-5, 2436779 பெக்ஸ்: 2446654
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 2575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**பணிப்பெண் தேவை**

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வீட்டுப் பணிப்பெண் உடன் தேவை. வயது 23முதல் 40வரை. சம்பளம் பேசித தீர்மானிக்கப்படும். நாளை (11-10-2003) சனிக்கிழமை மாலை 4 மணிமுதல் 7 மணி வரை நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு:
இல.06,கடைச்சாமி வீதி,
நாவலர் வீதி,
(மாநகரசபை)
(23491) யாழ்ப்பாணம்.


# மடத்தடி மக்கள்....

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)

இம்முகாமை இனங்காண்பது சிரமம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், பாடசாலை செல்லும் போது, முடிந்து வீடு திரும்பும்போதும் அவ்வழியால் செல்லும் மாணவிகளை அக்காவலரணில் இருக்கும் படையினா கிண்டல் பண்ணுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவை எல்லாவற்றினதும் ஒரு மொத்த வடிவம்தான் அன்று பொலீஸார் மற்றும் படையினர் மீது பொது மக்கள் காட்டிய எதிர்ப்பு.

"இந்தக் காவலரண் இறுதியில் இருக்கிறது எமக்கு நீண்டகாலமாகவே பிடிக்கேலை. இது இந்த இடத்தில் தேவையில்லாததும்கூட. ஆனால், இதுக்கு நாங்கள் என்ன செய்யிறதென்று நீண்ட நாளாக யோசிச்சனாங்கள். இந்தக் காவலரணை இதில் இருந்து அகற்றுவது என்ற எமது முடிவை மேலும் வலுவாக்க அன்றைக்கு இதில் நடந்த விபத்து நல்லதொரு காரணமாப் போச்சு" என்று தெரிவித்தார் எதிர்ப்பில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர்.

ஒட்டு மொத்தத்தில் பார்க்கப் போனால் இராணுவ காவலரண் அவ்விடத்தில் அமைந்துள்ளது அப்பகுதி மக்கள் அனைவருக்கும் பலத்த நெருக்கடியைக் கொடுத்துள்ளது. அதனால்தான் நீண்ட காலமாகப் பொறுத்திருந்த மக்கள் கடந்த 4 ஆம் திகதி அதனை அகற்றக் கோரி பொலீஸார் மற்றும் படையினர் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

இனியாவது இராணுவத்தினர் இப பிரச்சினைகளை நன்குணர்ந்து வீதிகளில் உள்ள இராணுவக் காவலரண்களை அகற்றுவது அவசியம் இல்லையேல் மடத்தடிச் சம்பவம் போன்ற சம்பவங்கள் இனி அடிக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

# தீபாவளி வாழ்த்து நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஒக்.10

ஐரோப்பிய நாடுகளில் ஒளிபரப்பாகும் ரி.ரி.என். தொலைக்காட்சி மூலம் ஐரோப்பிய நாடுகளில் வாழும் உறவுகளுக்கு தீபாவளி வாழ்த்துச் சொல்லும் நிகழ்ச்சிக்கான ஒளிப்பதிவுகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 12.00 மணி வரையும் பின்னர் 3.00 மணிமுதல் 6.00 மணிவரையும் நல்லூர் ஆலய முன்றலில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் 2223919 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

(ம)


## இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
**S.N.குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 8மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(29-12-16) (23488)


## ஆத்ம சாந்திக் கிரியை அழைப்பு

அன்னை மடியில் 11 08 1920



ஆண்டவன் அடியில் 10 09 2003

**அமரர் சதாசிவம் சிவக்கொழுந்து**
(கோப்பாய் வடக்கு)

கடந்த 10.09.2003 சிவபதமடைந்த
அமரர் சதாசிவம் சிவக்கொழுந்து
அவர்களின் ஆத்மசாந்தி, சபிண்டிகரண நிகழ்வுகள்
இன்று (10-10-2003) வெள்ளிக்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன.
இந்நிகழ்வில் உற்றார்,உறவினர், நண்பர்கள்,
அனைவரையும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

*இராசவீதி,*
*கோப்பாய் வடக்கு.* (C-30636) (29-12-16) -குடும்பத்தினர்.


**ராஜா** யாழ்ப்பாணம்

பிரசாந்த், கிரண், வடிவேல், நம்பியார் நடிப்பில்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

**நாகம்ஸ்** சுன்னாகம்



விக்ரம், திரிஷா, விவேக் நடித்த
சாமி
(ரீல்ஸ்)
காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)
அடுத்த வெளியீடு : ராமச்சந்திரா

**நிர்மலா**

இன்று முதல்
பாலா, திபு, வடிவேல் நடித்த
அன்பு
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (ரீல்ஸ்)
TUXE DO

**லஷ்சுமி சினிமா** இணுவில்

இன்றுமுதல்
பிரசாந்த், ஷாலினி, வையாபுரி நடித்த
பிரியாத வரம் வேண்டும்
(ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (பி.நே)



**திருமறைக் கலாமன்றம்**
நடத்தும்
**தென்மோடி நாட்டுக் கூத்துப்போட்டி**

காலம்: நாளை (11.10.2003) சனிக்கிழமை
நேரம்: மு.ப. 9.30 - பி.ப. 5.00 மணி
இடம் : யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட மண்டபம்.

இப்போட்டியில் பங்குபற்றும்
போட்டியாளர்களையும்
மற்றும் ஆர்வலர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி,
(C/30634) (29-12-16)

## லொறி உரிமையாளர் கவனத்திற்கு

எமது நிறுவனத்தில் பதிவுசெய்து உள்ளூர் சேவையில் ஈடுபடும் லொறி உரிமையாளர்கள் இன்று காலை 8 மணிக்கு பொருள்களை ஏற்றுவதற்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு சமுகமளிக்கவும்.

ஈஸ்வர பகவான் & கம்பனி
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2350
(C-30633) (29-12-16)

## லொறி உரிமையாளர் கவனத்திற்கு

பருத்தித்துறை இறங்குதுறையில் இருந்து வவுனியாவிற்கு கொண்டு செல்வதற்கு இன்று 10 ஆம் திகதியும் நாளை 11 ஆம் திகதியும் பொருள்கள் உண்டு.
50Kg பொதிக்கு 40/= வீதம் வழங்கப்படும்.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஈஸ்வர பகவான் & கம்பனி
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இல.: 021 222 2350
(C-30633) (29-12-16)



## நடமாடும் இலவச கண் பரிசோதனை முகாம்

'உங்கள் கண்களை நாம் காப்போம்'

- உங்கள் இடத்தில் கண்பரிசோதனை செய்யவேண்டுமா?
- பாடசாலையில் ❊ அலுவலகங்களில் ❊ பொது இடங்களில் பரிசோதனை செய்யவேண்டுமா?
- சிறிய எழுத்துக்கள் எழுத, படிக்க சிரமப்படுகின்றீர்களா?
- ஒரேவிதமான தலைவலியினால் அவதிப்படுகின்றீர்களா?

அப்படியாயின் உடன் தொடர்புகொள்ளுங்கள். எப்பிரதேசம் என்றாலும் நாம் வருவோம். கொழும்பிலிருந்து வருகைதந்த வைத்திய நிபுணர்களால் இலவசமாக கண்பரிசோதனை செய்யப்படும்.
பெறுமதியான கண்ணாடிகளை 750/= பெறுமதியில் பெற்றுக்கொள்ளலாம்.
அழைக்கவேண்டிய தொலைபேசி இல.0777 - 677079
(இரவு 8.00 மணிமுதல் காலை 8.00 மணிவரையும் சனி, ஞாயிறு முழுநேரமும் தொடர்புகொள்ளலாம்)
(சி-30614) (12-18)

## நிலவு . COM இன்
## தமிழ் கணினி 2003

ஊடக அனுசரணை : உதயன்


## மரண அறிவித்தல்கள்

### கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை
(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை (இளைப்பாறிய அதிபர்) நேற்று (09.10.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பாலாம்பிகையின் அன்புக் கணவரும் பாலகுமார் (இலங்கை வங்கி, வவுனியா), சகிதேவி-தயாபரன் (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவசக்தி-பாலகுமார் (இந்தியா), தயாபரன் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, செல்லம்மா-வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சஞ்சைகுமார் (இந்தியா), ஜனகன் (இந்தியா), தீனதயாள், திவாகர் (சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.10.2003) சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரின் நல்லூர் இல்லத்தில் நடைபெறும்.

*68, மருதடி வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (23486) (29-12-16)
தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### குருநாதி குலசிங்கம்

வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக்கொண்ட குருநாதி குலசிங்கம் நேற்று (09.10.2003) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை 11.10.2003 அவரின இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12.30 மணி பாலாவில் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

*வட்டு.கிழக்கு,*
*வட்டுக்கோட்டை.* (23493) (29-12-16)
தகவல்: பாரியாரும், பிள்ளைகளும்.

# பிரிட்டிஷ் பாதுகாப்பு அக்கடமி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ.மோகனதாஸ் மற்றும் பீடாதிபதிகள் ஆகியோரை இக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமிழ் மக்களின் பாதுகாப்பு, அவர்களின் ஆட்சி உரிமை, எதிர்கால நிலைமை, சமாதானப் பேச்சுகளின் முன்னேற்றம் ஆகியன தொடர்பாக அறிவதில் அவர்கள் கூடுதல் கவனம் செலுத்தினர்.

அயர்லாந்தில் தற்சமயம் இடம்பெறும் சந்திப்புக்களின் பின்னர் தயாரிக்கப்படும் இடைக்கால நிர்வாக வரைவின் அடிப்படையில் பேசசுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்குண்டு என்றும் -

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் ஏகோபித்து ஒன்றுபட்டு நிற்பதால் புலிகளின் தலைமையில் ஆட்சி அமைவதையே மக்கள் விரும்புகின்றனர் என்றும் குழுவினரிடம் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் எடுத்துக்கூறினர்.

விடுதலைப் புலிகள் இன விடுதலைப்போராட்டம் ஒன்றையே நடத்துகின்றனர். அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர். பிரிட்டிஷ் அரசு பயங்கரவாதிகளாகப் புலிகளைப் பிரகடனம் செய்திருப்பது தென் இலங்கையிலுள்ள சக்திகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. எனவே, புலிகள் மீதான தடையை நீக்க பிரிட்டிஷ் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இடைக்கால நிர்வாக சபைக்கு சட்டம், ஒழுங்கு, காணி, நிதி அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அரசமைப் பின் 13 ஆவது சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் இந்த அதிகாரங்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவு தயாரிக்கப்பட வேண்டியது அவசியம என அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையப்பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

ஈழக்கோரிக்கையை தமிழ் மக்கள் கைவிட்டு விட்டார்களா என பிரிட்டிஷ் தேசிய பாதுகாப்பு அக்கடமி குழுவினர் யாழ் பல்கலைக்கழக புத்திஜீவிகளிடம் கேள்வி எழுப்பினர்.

தமிழ்மக்கள் ஈழக்கோரிக்கைகளை கைவிட்டுவிடவில்லை. அதற்கு மாற்றீடாக முன்வைக்கப்படும் தீர்வை பொறுத்தே அது குறித்து அவர்களால் முடிவு செய்யமுடியும்.தமிழ் மக்கள் சகல அதிகாரங்களுடன் தம்மைத் தாமே நிர்வகிக்கும் அதிகாரம் கொண்ட தீர்வையே எதிர்பார்த்திருக்கின்றனர் என புத்திஜீவிகள் பதில் அளித்தனர்.

தெற்காசிய நாடுகளின் நிலைமையை ஆராயும் நோக்குடன் விஜயம் மேற்கொண்டுள்ள இக்குழுவினர் பங்களாதேஷ்,இந்தியா ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர். தற்சமயம் இலங்கை வந்துள்ள குழுவினர் பாகிஸ்தானுக்குச் செல்வதுடன் தமது விஜயத்தை பூர்த்தி செய்யவிருக்கின்றனர். (எ-3-5)

# காணிப்பிரச்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரட்டப்பட்டிருக்கின்றன.

இதேவேளை -

நேற்று மாலை ஆலங்கேணி, தம்பலகாமம் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் கிண்ணியாவில் வைத்து தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

பைசல் நகரில் வசித்த 70 குடும்பங்களைச் சேர்ந்த 270 பேர் அச்சத்தில் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

நேற்று கண்டியில் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டிருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் அந்த வைபவத்தை ரத்துச் செய்து விட்டு ஹெலி கொப்டர் மூலம் திருகோணமலைக்குச் சென்றார்.

அவர் கிண்ணியாவுக்குச் சென்றவுடன் அவரைச் சூழ்ந்து கொண்ட மக்கள், தமது பாதுகாப்புக்கு துப்பாக்கி தருமாறும் பொலீஸாரினால் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லையென வும் கோஷமிட்டனர்.

திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தயாசமரவீர தலைமையில் பொலீஸ் பொறுப்பதிகாரி கிளமன் பெர்னாண்டோ, சீனன்குடா பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உலமாசபை பிரதிநிதிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள் ஆகியோர் அடங்கிய அவசர மாநாடு ஒன்றை அமைச்சர் கூட்டினார்.

இரு பகுதியினரையும் சமரசம் செய்து எந்தவித மோதல்களுக்கும் இடமளிக்காமல் நடவடிக்கை எடுக்குமாறு ஹக்கீம் கேட்டுக்கொண்டார்.

நேற்றிரவு வரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இப்பகுதிக்குச் செல்லவில்லை. கிண்ணியா பகுதியில் இராணுவத்தினரும், பொலீஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுவருகின்றனர்.

# தமிழீழப் பெண்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

16ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு புலிகளின் மகளிர் அமைப்பு தமிழர் தாயகம் எங்கும் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

மாலதி வீரச்சாவடைந்த இடமாகிய கோப்பாயில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை கோப்பாய் பிரதேச மகளிர் அமைப்புக்களுடன் இணைந்து கோப்பாய் தேசிய எழுச்சிப் பேரவை மேற்கொண்டுள்ளது.

இந்த நிகழ்வுகளை முன்னிட்டு கோப்பாய்ப் பகுதி எங்கும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. வீதிகள் எங்கும் சிவப்பு - மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் தரவைப் பகுதியில் உள்ள மாலதி நினைவாலயத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெறும்.

பிற்பகல் 4 மணியளவில் கோப்பாய் தரவைப் பகுதியிலுள்ள மாலதி நினைவாலயத்தில் இருந்து மாலதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி புறப்படும். ஊர்தி, பாண்ட் வாத்தியம் மற்றும் பொதுமக்கள் சகிதம் ஊர்வலமாகச் சென்று கோப்பாய் கந்தசுவாமி ஆலய முன்றிலை அடையும்.

மாலதியின் திருவுருவப்படம் தாங்கிய இந்த ஊர்தி முன்னதாக சங்கானையிலிருந்து இன்றுகாலை 8 மணிக்கு புறப்படவுள்ளது. புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, பருத்தித்துறை வீதி ஆகிய பிரதேசங்கள் ஊடாக கோப்பாய் தரவைப் பகுதியிலுள்ள நினைவாலயத்தை இது வந்தடையும்.

பிற்பகல் 5 மணியளவில் கோப்பாய் வீதியிலுள்ள கலாசார மண்டபத்தில் மாலை நிகழ்வுகள் ஆரம்பமாகும். நினைவுரைகள், எழுச்சியுரைகள் என்பவற்றுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

கலைநிகழ்வில் நாட்டியம், நாடகம் என்பவற்றுடன் ஸப்தஸ்வரா இசைக்குழுவின் இசை நிகழ்வும் இடம்பெறும் இதில் தமிழீழத்தின் தலைசிறந்த பாடகர்களான சாந்தன், சுகுமார் போன்றோரும் கலந்து கொண்டு பாடல்களை இசைக்கவுள்ளனர்.

வன்னிப்பகுதி உட்பட வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் இன்றைய தினம் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (எ-9-17-72-86)

# முல்லையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணைப்பொறுப்பாளர் அர்ச்சனா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி ஏற்றிவைத்தார்.

2 ஆம் லெப் மாலதியின் திருவுருவப்படத்துக்கு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

அரங்க நிகழ்வுகள் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தலைமையில் நடைபெற்றன.

மாலதி படையணியின் வரலாற்று நூலான 'விழுதாகி வேருமாகி' என்ற நூலை தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வெளியிட்டு வைத்தார்.

மாலதி படையணியின் மாவீரர் மேஜர் நித்தியாவின் தாயார் செல்வபாக்கியம் இந்த நூலின் முதற் பிரதியினைப் பெற்றுக்கொண்டார்.

தமிழீழ தேசியத் தலைவர் நூலின சிறப்புப் பிரதிகளை வழங்கினார். அதனுடன், 2 ஆம் லெப் மாலதியின் நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு மகளிர் படையணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய போராளிகளுக்கும் படையணிகளுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் பரிசில்களை வழங்கினார்.

"விழுதாகி வேருமாக" நூலுக்கான வெளியீட்டுரையை போராளி மலைமகள நிகழ்த்தினார். மதிப்பீட்டு உரைகளை மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், எழுத்தாளர் ஆதிலட்சுமி சிவகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை கலை பண்பாட்டுகழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார். தொடர்ந்து மகளிர் இசைக்குழுவினரின் அரங்கேற்றம் இடம்பெற்றது.

மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா தலைமையிலான விழாக்குழுவினர் நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். (எ-4)

# மேற்குலகப் பெண்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகளது உண்மையான மன உணர்வுகளை புரிந்துகொள்கின்ற தன்மையும் அவசியம். இவை இல்லாது போனால் எமது போராட்டத்தின் வரலாற்றை அதன் ஆழத்திலும், அதன் அகலத்திலும் அதன் யதார்த்த கோலத்திலும் தரிசித்துக் கொள்வது கடினம்.

போர்பற்றிய அறிவு, ஞானம் இல்லாத - பழைமையில் சிதைந்து போன - வரலாற்றாசிரியர்களினால் எமது பெண் போராளிகளது வரலாற்றைத் துல்லியமாக கிரகித்து அறிவது சிரமம்.

எனவே, போர்க்களத்தில் அளப்பெரும் தியாகங்களையும் சாதனைகளையும் படைத்த பெண் போராளிகளே இப்பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்பது நீண்ட நாளாக என்னிடமிருந்த பேரவா.

எனது பேரவாவிற்கு விருந்தளித்து, மாலதி படையணியின் வெளியீடாக நெஞ்சை உறையவைக்கும் பல்வேறு சமர்களின் தொகுப்பாக - பெண் போராளிகளது வீரத்தையும் விவேகத்தையும் பறை சாற்றும் வரலாற்றுப் பதிவேடாக - இந்நூல் வெளிவருவது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

உலகிலேயே சரி பாதியினர் பெண்கள். எமது சமூகத்திலும் சரி பாதியினர் பெண்கள். இந்த சரிபாதித் தொகையினரான பெண்கள், போராட்டத்தில் பங்கு பெறாது எமது தேசத்தின் விடுதலை சாத்தியப்படாது.

சரிபாதியினர் பெண்களுக்கு விடுதலைஇன்றி எமது தேச விடுதலையும் முழுமை பெறாது. ஆனால், அன்று எமது சமூகத்தில் பெண்களுக் கெதிரான சமூக அநீதிகள் அதிகரித்திருந்தன. பெண் அடக்குமுறைக் கருத்துக்கள் பலமாக நிலவின.

எமது சமூகமே சாதி சமய வேறுபாடுகளால் பிளவுபட்டு நின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக நில... வந்த முறைமையும், சாதீய கட்டமைப்புக்களையும் இறுக்கமாகப் பின்னிப் பிணைந்து அமைந்த பொருளாதார உற்பத்தி முறையில் எமது சமூகக் கட்டமைப்பு எழுப்பப்பட்டிருந்தது.

அது சுயசிந்தனைக்கு வரம்புகளை விதித்தது. பெண்கள் தாம் அடக்குமுறைக்குள் வாழ்கின்றோம் என்பதை உணரவிடாது தடுத்தது.

அத்துடன், எதிரியின் இன அழிப்புப் போர் எம்மண்ணில் என்றும் இல்லாதவாறு தீவிரமடைந்திருந்தது. அந்த நிலையில், அடிப்படையான சமூக மாற்றத்தை ஏற்படுத்தி பெண் விடுதலைக்கு வழி சமைப்பது பற்றி நாம் சிந்திக்க முடியாதிருந்தது.

எனவே, எமது விடுதலைப் போராட்டத்தில் பெண்களையும் அணி சேர்ப்பதன் ஊடாக படிப்படியாக சமூக மாற்றத்தை ஏற்படுத்தி, பெண் விடுதலையையும் சேத விடுதலையையும சாத்தியமாக்கலாம் என நான் உறுதியாக நம்பினேன்.

இவ்வாறுதான் எமது போராட்டத்தில் பெண்புலிகள் தோற்றம் பெற்று இன்று எதிரியின் படைப்பலத்தை சிதைத்து, யுத்தத்தின் போக்கையே நிர்ணயிக்கின்ற பெரும் படையணிகளாக எழுந்து நிற்கின்றார்கள்.

அத்துடன், சமூகத்திலேயே மிகப் பெரும் புரட்சியை அவர்கள் நிகழ்த்தியிருக்கின்றார்கள். சமூக கருத்துணர்வில் புதிய பார்வையை வளர்த்து வருகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஆணும், பெண்ணும் சமமான ஆற்றல்களுடனேயே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உடற்கூற்றியல் நிபுணர்களது கூற்றுக்குப் பெண்புலிகளே உலகிற்கு உதாரணமாக வாழ்கின்றார்கள்.

புரட்சிப் புலிகளாக களமிறங்கியுள்ள எமது பெண்புலிகள் எத்தகைய துன்பங்களையும் சுமந்து எத்தகைய நெருக்கடிகளையும் சமாளித்து எத்தகைய ஆபத்துக்களையும் எதிர்கொண்டு போராடுகின்றார்கள். அசைக்க முடியாத மன உறுதியும், அதனால் பிறக்கும் துணிவும் அவர்களிடம் உள்ளன. அபாரமான சகிப்புத்தன்மையையும், தளராத உறுதியையும் கடும் உழைப்பையும் கொண்டவர்கள் அவர்கள்.

தரையில் மட்டுமல்லாது கடலில் இருந்தும் போர் புரிகின்றனர். கடற்போர்க்கலை மிகவும் கடினமானது. அதற்கு நிறைந்த பயிற்சியும் அனுபவமும் தேவை. கடல் சதா அசைந்து கொண்டிருக்கும். அதன் முதுகில் சவாரி செய்து கொண்டு சண்டையிடுவது மிகவும் கடினமானது.

எமது பெண்புலிகள் மீன்குஞ்சுகள் போல் கடலோடு வாழப்பழகி விட்டனர். இந்தப் பெண் போராளிகளை, அவர்களது போராட்ட வாழ்க்கையை, அவர்களிடையே நிலவும் ஆழமான புரிந்துணர்வை, அளவிடமுடியாத அன்புறவை இந்த நூல் அழகுதமிழில் - எளிய நடையில் - மிக நுட்பமாக - வெளிப்படுத்தியுள்ளது.

பல்வேறு இடங்களில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களுக்கு ஊடாக மாலதி படையணியின் வரலாறு சொல்லப்படும் பாங்கு சிறப்பாக அமைகிறது.

மேலும், பெண் புலிகளது போர் அனுபவத்தை மாலதி படையணியின் சண்டை அனுபவத்துடன் பின்னிப் பிணைந்து, பெண் புலிகளது வரலாறு இந்நூலில் அழகாக படைக்கப்பட்டிருக்கிறது.

இந்நூலின் ஆக்கத்துக்கு அயராது உழைத்த மாலதி படையணிப் போராளிகளுக்கும், தளபதிகளுக்கும் எனது பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், இந்நூல் சிறப்புற வெளிவர எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்கிறேன் என்று அதில் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# அரசு எதிர்ப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துங்க தலைமையில் பிரதான செயற்குழு ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது. இக்குழுவின் அழைப்பாளராக டி.எம். ஜயரத்ன நியமிக்கப்பட்டிருக்கிறார். எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க ஆகியோரும் இக்குழுவில் அடங்குவர்.

# புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"புலிகள் மீது தடை விதிக்கும் முடிவு நிரந்தரமானது அல்ல. அது மாற்றப்படலாம். ஆனால், அதற்கு சில விடயங்களில் புலிகளின் நிலைப்பாடு மாற வேண்டும் என அமெரிக்க அரசு எதிர்பார்க் கின்றது" என்று பதிலளித்தார் அமெரிக்கத்தூதுவர்.

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மக்களை மீளக்குடியமர்த்துவதில் உள்ள பிரச்சினைகள், வடக்கு - கிழக்குக்கு உரிய நிர்வாக அதிகாரங்களுடன் கூடிய நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் ஆகியவை குறித்து அமெரிக்கத் தூதருக்கு விளக்கினர்.

இடம்பெயர்ந்தோர் மீளக் குடியமர்வதற்கு ஒத்துழைக்க இராணுவம் மறுக்கின்றது. இடம்பெயர்ந்த அகதிகளை இராணுவம் தனது எதிரிகளாக நோக்குகின்றது என்றும் அவர்கள் தூதரிடம் எடுத்துரைத்தனர். (எ)


Institute of Professional Accounting Studies
Chartered Accountancy, aat, Cima (U.K)

ஆகிய தொழில்சார் கற்கைநெறிகளுக்கான வடபகுதி மாணவர்களின் தனித்துவம்வாய்ந்த வழிகாட்டி நிறுவனம்.

IPAS மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது!

யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றிலேயே முதல்முறையாக கடந்த June மாதம் யாழில் இடம்பெற்ற Chartered Accountancy, Foundation Level exam இல் 47% எமது மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

அகில இலங்கை ரீதியில் இப்பரீட்சைக்குத் தோற்றியோரில் 25% மாணவர்கள் மட்டுமே சித்தியடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்வரும் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் விரைவில் ஆரம்பமாக இருப்பதால் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளவும்.

- aat stage I & III (For 2004 June exam)
- Chartered Accountancy-Foundation & Intermediate Levels (For 2004 July exam)
- Cima (U.K.) Foundation Level (For 2004 May exam)

புதிய பிரிவில் இணையும் மாணவர்களுக்கு இலவச Visual Aids உடன் கூடிய ஆங்கில அறிவூட்டல் வழங்கப்படும்.

Office Hours: Sat & Sun- 9.00 -3.00
T.P.: 0777-563292 / 563294

(C-30635)(12-18)

199, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
(பிரிமியர் பேக்கரி மேல்மாடி)



NEW SCIENCE COLLEGE
இணைந்த கணிதம்
A/L 2005
நிகழ்தகவு
Sat.,Sun.7.00 - 8.00 (a.m.)
(பழைய நேரம்)
ஆரம்பம்:11.10.2003
By:P.செந்தில்நாதன் B.Sc.
(23480) (12)



BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
A/L DAT பௌதிகம்
வெப்பப் பௌதிகம் மீட்டல்
ஆரம்பம:11.10.2003
SAT. 7.30 a.m.
A/L 2004 ஓட்ட மின்னியல்
ஆரம்பம:13.10.2003
MON. 4.00 p.m.
By:ஜெயசீலன் (B.Sc.)
(23477)(12)



புதிய பிரிவுகள் ஆரம்பம்

இக்கல்வியாண்டுக்கான இறுதிப்பிரிவுகள் 18-10-2003 பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

புலமைப் பரிசில் திட்டம் 2003 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

இப்பிரிவில் அனைத்து Diploma கற்கைநெறிகளும் ஆரம்பமாகும்.

INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அருகில் முகாம் அமைத்துத்தான் கட்டுநாயக்கா, மத்தியவங்கி ஆகியவற்றை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்து துவம்சம் செய்தார்களா? சொல்லுங்கள்!

## எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் ராஜித பதில் கேள்வி

கட்டுநாயக்க விமான நிலையமும மத்திய வங்கியும் தாக்கப்பட்ட போதும் விமானங்களும், கப்பல்களும் போராப்படகுகளும் புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட போதும் நாட்டில் பாதுகாப்பைப் பற்றி அலட்டிக கொள்ளாதவர்கள். 'குரங்குபாஞ்சானில் புலிகள் முகாம் அமைத்துவிட்டனர்; திருகோணமலைத்துறை முகத்தைப் பிடிக்கப்போகின்றனா. இதனால் முழுநாட்டிற்குமே பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது'- என்று ஒப்பாரிவைப்பது வேடிக்கையாக இருக்கின்றது. இன்று ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் அப்போது வாயை மூடிக்கொண்டு அமைச்சு நாற்காலிகளுக்கு சூடேற்றிக் கொண்டிருந்தமை ஏன்?

இப்படிக் கேள்வி எழுப்பினார் காணிஅமைச்சர் ராஜித சேனாரத்ன.

நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணை மீது பேசும்போதே அவர் இப்படிக் கூறினார்.

செவ்வாயன்று காலை 10.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தலைவரான ஸ்ரீஹுந்துன்நெத்தி தலைமையில் நாடாளுமன்றம் கூடியது. வழமையான கேள்வி - பதில் நேரத்தின் பின் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்த அச்சுறுத்தல்கள் தொடர் பான ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார்.

ஜே.வி.பி. உறுப்பினரான விமல் வீரவன்ஸ எதிர்க்கட்சித் தலைவரின் பிரேரணையை வழிமொழிந்தார்.


இதனால், வழமையான சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டு இந்தப் பிரேரணை மீதான விவாதம் முழுநாளும் இடம்பெற்றது.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பான விவாதம் எனக் குறிப்பிடப்பட்டபோதும் விவாதம் என்னவோ சமாதான உடன்படிக்கை மீதானதாகவே காணப்பட்டது.

நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு வேட்டுச்சத்தங்கள் ஓய்ந்துவிட்டன. ஆனால், நாடாளுமன்றத்தில் அரசியல் அதிர்வேட்டுக்கள் மட்டும் ஓயவில்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புலிகளைக் கண்டிக்கிறோம் என நினைத்துக் கொண்டு, புலிகளின் சாணக்கியம், போர்த்திறமை, ஆயுதபலம், தந்திரோபாயக்காய்நகர்த்தல் என்பனவற்றையெல்லாம் ஊர்ஜிதப்படுத்தி புலிகளின் பலத்தை வெளிப்படுத்தித் தாமே பிரசாரம் செய்தனர்.

மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவது போல்



ஐ.நா.சபையின் பொதுச்செயலாளர் கோபி அனானை கிளிநொச்சிக்கு அழைத்துச்செல்ல முயன்றதாலேயே இலங்கை விஜயத்தை அவர் ரத்துச் செய்துவிட்டார் என்று ஒரு குண்டைத தூக்கிப்போட்டு குட்டையை குழப்பினர் எதிர்க்கட்சியினர்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் விமல் வீரவன்ஸவும், திருகோணமலை மாவட்டத்திலும் துறைமுகத்துக்கு அருகிலும் கூட புலிகள் முகாம்களை அமைத்து விட்டனர் என்று பட்டியல் போட்டுக் காட்டியதோடு, இதனால் நாட்டின் பாதுகாப்பிற்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது; அரசாங்கம் கண்டும் காணாமலும் இருக்கின்றது என்று குற்றஞ்சாட்டினர்.

ஆனால், காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன இவர்கள் அனைவருக்கும் பதிலடி கொடுத்தார்.

முன்னைய அரசாங்கத்தின் ஆறு வருட காலத்தில் 14,105 படையினர் கொல்லப்பட்டனர். ஆனையிறவு முகாம உட்பட பாரிய படை முகாம்கள் அனைத்தையும் படையினர் கை நழுவவிட்டனர். ஏன் தலைநகரிலும் கூட கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தையும், மத்திய வங்கியையும் புலிகள் பயங்கரமாகத் தாக்கினர். இவற்றுக்கு அருகிலெல்லாம் புலிகள் தமது முகாம்களை அமைத திருந்தனரா என்று கேள்வி எழுப்பினார் ராஜித.

ஆனையிறவு முகாம் தாக்கப்பட்டபோது ஒரே இரவில் 1,700 படையினர் அங்கு கொல்லப்பட்டனர். அவர்களின் சடலங்களைக் கூட எடுக்க முடியவில்லை. ஒரே நாளில் 4 பாரிய முகாம்களை நாம் இழந்தோம். 'எங்களைக் காப்பாற்றுங்கள்' என்று படை அதிகாரிகள் அபாயக்குரல் எழுப்பினர்.

அப்போதைய அமைச்சர்கள் நாட்டின் பாதுகாப்பு நிலை குறித்துப் பேசவில்லையே ஏன்?

இப்பொழுது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க துணிச்சலுடன் புலிகளுடன செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையின் பயனாக இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுள்ளன. மரண ஓலங்கள் ஓய்ந்து விட்டன. மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்.

ஆனால், எதிர்க்கட்சியினர் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் முலாம் பூசி அவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். உரத்த குரல் சத்தம் போட்டுப் பேசினாலும் நாட்டு மக்களை ஏமாற்றமுடியாது - என்று அமைச்சர் ராஜித சேனா ரத்ன பதிலடி கொடுத்தார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் தான் ஆரம்பம் முதல் பாடும் 'திருகோணமலைத் துறைமுகத்திற்கு ஆபத்து' என்ற பாட்டையே அன்றும் சபையில் பாடினார்.

அவர் கூறியதாவது:-

ஜனாதிபதியோ, பொதுஜன ஐக்கிய முன்னணியோ சமாதானப் பேச்சுக்களுக்கு எதிரிகள் அல்ல. ஆனால், பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாகவும், அது தொடர்பான அரசின் அணுகுமுறைகளையும் தான் நாம் கண்டிக்கிறோம்.

எந்த ஒருகட்சி ஆட்சியில் இருந்தாலும் நாட்டின் இறைமையும் ஒருமைப்பாடும் பாதுகாக்கப்பட வேண்டும் ஆனால், இன்றைய அரசாங்கம் எவருடைய கருத்துக்களுக்கும் செவி சாய்ப்பதில்லை.

புலிகள் இன்று மிகவும் சிறப்பாக செயற்படுகின்றனர். அதேவேளை, கிடைக்கும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவும அவர்கள் தவறுவதில்லை.

புலிகள் சமாதான ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி திருமலைத்துறை முகத்தைச் சூழ பாரிய முகாம்களை அமைத்துள்ளனர். அவர்களிடம உள்ள ஆயுதங்களும் ஏவுகணைகளும் 15 மைல் தூரம் வரை சென்று தாக்கக்கூடியவை. ஆனால், புலிகளால் அச்சுறுத்தல் இல்லை என அரசாங்கம மீண்டும மீண்டும் கூறுவதுதான் வேடிக்கை.

சமாதானம் பேச்சின் மூலம்தான் ஏற்படவேண்டும் என்பதில் எமது கருத்தும் அரசின் கருத்தும் ஒன்றே. ஆனால், அதுவே நீண்டு கொண்டு போகக்கூடாது. சமாதானப் பேச்சு என்று கூறிக்கொண்டு, மறுபுறத்தில் பாதுகாப்பில் கோட்டை விட்டு விடக் கூடாது. பாதுகாப்பையும் உறுதிப் படுத்த வேண்டும் என்று கூறிய கதிர்காமர், கூட்டணி உறுப்பினர் இரா.சம்பந்தனையும் சீண்டத்தவறவில்லை.

நான் மதிக்கும் ஓர் அரசியல்வாதி இரா.சம்பந்தன். முன்பு எப்போதும் நேர்மையாகவும் ஒருநிலையாகவும் பேசுவார் அவர். ஆனால், இப்போது அவர் புலிகளுக்கு வக்காலத்து வாங்கி 'பல்டி' அடித்து விட்டதுதான் கவலையாக இருக்கின்றது என்றும் கதிர்காமர் குறிப்பிட்டார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகள் முன்வைக்கும் வரைவுகளின் மூலம் புலிகளின் சுயரூபத்தைக் கண்டுகொள்ளமுடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

அவர் பேசுகையில் கூறியதாவது:-

சமமான ஆயுதபலமும் ஆட்பலமும்தான் பாதுகாப்புக்கு அவசியம் என சிலர் கருதுகின்றனர். அது தவறு. புரிந்துணர்வும், சம உரிமையும், சமத்துவமும்தான் உண்மையான பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

ஆனால், சமாதானக் கட்டமைப்பில் சந்தேகம் ஏற்பட்டால் அதுவே பாதிப்பை ஏற்படுத்தும்.

இன்றைய நிலையில் சமாதான முன்னெடுப்புகள் ஜனாதிபதிக்கும் பிரமதருக்குமிடையிலான கடிதப் பரிமாற்றமாகிவிட்டன. இது முற்றுப்பெற வேண்டும்.

இப்பொழுது விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான தமது வரைவைத் தயாரித்து வருகின்றனர். அது வெளிப் படுத்தப்படும் போதுதான் முஸ்லிம்களின் பாரம்பரியம் பாதுகாப்புத் தொடர்பாக புலிகள் என்ன நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றனர் என்பது புரியும்.புலிகளும் அரசும் சமாதானத்துடன் கூடிய பாதுகாப்பை உறுதிப் படுத்தவேண்டும்.

இன்று நாட்டிற்கு அச்சுறுத்தல் இல்லை. தனி மனித இயல்பு வாழ்க்கைக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று சித்தார்த்தன் எம்.பி.கூறினார்.

இறுதியாக, விவாதத்திற்கு பதில் அளித்த பாதுகாப்பு அமைச்சர் - புலிகள் தமது படைப்பலத்தை அதிகரித்துள்ளனர் என்பதை ஒப்புக் கொண்டதோடு, அதற்கு ஈடாக முகம் கொடுக்க அரசபடைகள் தயாராகவே இருக்கின்றன. எவரும் அச்சப்படத் தேவையில்லை என உறுதியளித்தார்.

நாடாளுமன்றம் மீண்டும் 21 ஆம் திகதி கூடும்.

---

(குரங்குபாஞ்சான் முகாமை அகற்ற முடியாத நிலையிலிருக்கும்)

## கையாலாகாத ஐ.தே.க. அரசால் நாட்டைப் பாதுகாக்க முடியுமா?

### கேள்வி எழுப்புகிறார் விமல் வீரவன்ச

அரசு புலிகளுடன் செய்த சமாதான உடன்படிக்கை தென்பகுதி சிங்களவர்களுக்கு மட்டுமல்ல, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் அமைப்புக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கூட அச்சுறுத்தலாக மாறி விட்டது. சமாதான உடன்படிக்கையையும் மீறி குரங்குபாஞ்சான் குளத்தில் புலிகளால் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு முகாமைக்கூட அகற்ற முடியாத கையாலாகாத - இந்த அரசு எப்படி இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கப்போகிறது.

-இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்ட 'பாதுகாப்பு அச்சுறுத்தல்கள்' தொடர்பான ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் பேசும்போதே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை எந்த ஓர் அரசியல் கட்சிக்கும் சொந்தமானது அல்ல. ஐ.தே.கட்சியோ,பொ.ஐ.முன்னணியோ, ஜே.வி.பியோ தனிப்பட்ட முறையில உரிமை கொண்டாடமுடியாது.

நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பன பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆனால், அரசு - புலிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டதன் மூலம் நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை புலிகளுக்கு தாரை வார்க்கப்போகிறது.

இந்த ஒப்பந்தம் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேச அரங்கில் தமது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டது.

புனர்வாழ்வு உதவிகள் என்ற பெயரில் யுனிசெவ் போன்றவை கோடியாக நிதியை வழங்குகின்றன.

ஆனால்,இந்த நிதியின் மூலம் புலிகள் தமது படைப்பலத்தை அதிகரித்து வருகின்றனர்.

கொழும்பில் பாதுகாப்பு சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதை பெருமையாகக் கூறுகின்றனர். ஆனால், தலைநகரில் புலிகள் தமது தளங்களை அமைக்கவும், ஆயுதங்களைக் குவித்து வைக்கவும் அது வழிவகுத்து விட்டது.

மேலும் இப்போது மலையக இளைஞர்களையும் புலிகள் தமது இயக்கத்தில் இணைத்து போர்ப் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

கடற்பரப்பிலும், தரையிலும் புலிகள் தமது நிலையை ஸ்திரப்படுத்தி வருகின்றனர்.

இங்கு போதிய பாதுகாப்பு இல்லை என்பதால் புலிகளின் சர்வதேச பிரதிநிதியான மகேந்திரன், ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனானை கிளிநொச்சிக்கு அழைத்துச செல்ல முயன்றார். அதனாலேயே கோபி அனான் இலங்கை விஜயத்தையே ரத்து செய்துவிட்டார்.

தெற்குப் பிராந்திய அபிவிருத்தி என்ற பெயரில் அம்பாந்தோட்ட முதல் காலி வரை பெரும் பகுதி நிலப் பரப்பை வெளிநாட்டு கம்பனிகளுக்கு தாரை வார்த்துவிட்டார்கள்.

அதேபோன்று சிறு அளவிலான மின் உற்பத்தித் திட்டங்களிலும் முதலீடு செய்யப்படுகின்றது.

இவற்றை எல்லாம் இப்போது அங்கீகரிப்பவர் புலிகளின் சர்வதேச பிரதிநிதியான அர்ஜுன மகேந்திரன். காலப்போக்கில் இவை அனைத்தும் புலிகளின் கைகளுக்குட் போய் விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை- என்றார் விமல் வீரவன்ச.

---

## நிரந்தர சமாதானத்துக்கு மக்கள் ஏங்கித் தவிக்க தற்காலிக சமாதானத்தையே பிடுங்கப் பார்க்கிறார்கள்

### எதிர்க்கட்சியினர் மீது ஊடகத்துறை அமைச்சர் சாடல்

தற்காலிக சமாதானத்தை அனுபவிக்கும் மூவின மக்களும் நிரந்தர சமாதானம் ஏற்படாதா என ஏங்குகின்றனர். ஆனால், எதிர்க்கட்சியினர் அரசியல் லாபத்தைக் கருதி நாட்டை மீண்டும் அதல பாதாளத்தில் தள்ளி, தற்போது நிலவும் அமைதியையும் குழப்பிவிடப்பார்க்கிறார்கள்.

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

உள்நாட்டுப் பிரச்சினையைப் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்வதே சர்வதேச சம்பிரதாயம். எமது பிரச்சினையை இன்று இருதரப்பினரும் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்ள முன்வந்திருப்பது நல்ல சகுனம்.

இலங்கை பாதுகாப்பற்ற நாடு என அன்று அறிவித்த உலக நாடுகள் இலங்கையை பாதுகாப்பான நாடு என இன்று அறிவித்துள்ளன. இதனால், உல்லாசப் பயணிகளின் வருகை 25சதவீதம் அதிகரித்துள்ளது. உல்லாசப் பயணத்துறை வருமானம் 30 சதவீதமாக அதிகரித்துள்ளது.

புலிகளை நம்பக்கூடாது எனக்கூறிக் கொண்டிருந்தால் இதற்கு முடிவுதான என்ன?

20 ஆண்டுகள் யுத்தத்தால் நாம் இழந்தது போதும், இந்த யுத்தம் இனியும் வேண்டுமா? பேச்சின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென 87சதவீத மக்கள் விரும்புகிறார்கள் என்று ஒரு நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

- இப்படி அவர் கூறினார்.

---

## புலிப் போராளிகளின் எண்ணிக்கை ஆயிரம் ஆயிரமாக அதிகரிக்கின்றதாம்!

### தினேஸ் குணவர்த்தன எம்.பி. அபாய அறிவிப்பு

ஆறாயிரம் போராளிகள் என்ற எண்ணிக்கையை 18 ஆயிரமாக புலிகள் அதிகரித்துள்ளதற்கு இடமளித்து அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

பொ.ஐ.முன்னணி எம்.பியான தினேஷ் குணவர்த்தன இப்படிக் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

புலிகள் தொடர்ந்தும் இளைஞர்கள், யுவதிகள் ஆகியோருக்கு ஆயுதப் பயிற்சியளித்து வருகின்றனர். புலிகள் இயக்கப் போராளிகளின் எண்ணிக்கை 18 ஆயிரமாக அதிகரித்துள்ளது. அவ்வளவு பேரும் கடலில் மீன்பிடிக்கவா?

இந்தோனேஷியாவில் புலிகளின் ஆயுதக் கப்பலொன்று சிக்கியுள்ளது. பெருமளவு லஞ்சம் கொடுத்து அந்தக் கப்பல் அங்கிருந்து தப்பி வந்துள்ளது. இன்னும் யுத்த நிறுத்தத்தை மீறி ஆயுதங்களை சேகரிக்கிறார்கள் என்று பகிரங்கமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

## கிராமிய பொருளாதார கட்டமைப்புக்களை உருவாக்கி

# வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டங்களை கூட்டுறவு அமைப்புகள் முன்னெடுக்க வேண்டும்

### கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் உரை

யாழ்ப்பாணம்,ஒக்.10

கிராமிய பொருளாதாரக் கட்டமைப்புக்களை உருவாக்கி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான செயல் திட்டங்களை கூட்டுறவு அமைப்புக்கள் முனனெடுக்கவேண்டும்.

- இவ்வாறு கூறினார் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம்.

வலி.கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவா க.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பொ.சிவலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்தியா பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்து வருவதற்கு அடிப்படையாக இருப்பது கூட்டுறவுத்துறையின் வளர்ச்சியாகும். இந்தியாவின் பொருளாதாரம் கிராமிய மட்டத்திலிருந்து விஸ்தீரணமான முறையில் வளர்ச்சி கண்டுள்ளது.

கூட்டுறவுத்துறையினர் மீது மக்கள் உறுதியான நம்பிக்கையோடு ஒன்றிணைந்து செயற்படுகின்றனர்.

இந்தியமக்கள் தேசிய வங்கிகளில தமது பணத்தை வைப்புச் செய்வதில் ஆர்வம் கொள்ளாது கிராமிய கூட்டுறவு வங்கிகளில் வைப்புச் செய்கின்றனர். கிராமிய வங்கிகள் அந்தப்பணத்தை கிராமிய மட்டத்தில் மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான திட்டங்களில் முதலீடு செய்கின்றன.

எமது பிரதேச மக்கள் கூட்டுறவு வங்கிகளில் தமது சேமிப்புக்களை வைப்புச்செய்வதற்கு தயங்குகின்றனர். இந்த மனோபாவம் மாற்றமடைய வேண்டும்.

கூட்டுறவு அமைப்புக்களும் இலாபத்தை மட்டும் குறிக்கோளாகக கொண்டு செயற்படாமல் தமது பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு செயற்படவேண்டும்.

இந்திய கூட்டுறவுத்துறை பொருளாதாரம், அறிவியல் என சகலதுறைகளில் கிராமிய மட்டத்தில் வளர்ச்சி கண்டுள்ளது. இந்த முன்மாதிரிகளை எமது பிரதேசங்களிலும் பயன்படுத்தி கிராமிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதன் மூலம் யுத்தத்தினால் பாதிப்படைந்துள்ள எமது பிரதேசத்தினையும் கட்டியெழுப்பவேண்டும் எனக் கூறினார்.

தமிழீழ நிர்வாகசேவை கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் பொ.புஸ்பன உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் யுத்த நெருக்கடிகளால் அல்லற்பட்ட வேளையில் கூட்டுறவுத்துறை ஆற்றிய சேவை பாராட்டுக்குரியது.

கூட்டுறவுத்துறை தமிழ் பிரதேசத்தில் தனித்துவமாக மேல் நிலைப்பட்டிருந்த காலத்தில் ஆற்றிய சேவைகள யுத்தத்தினால் அழிக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுத்துறை மேம்பாட்டிற்கு மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். கூட்டுறவுத்துறையில் தமது முதலீடுகளைச் செய்து கூட்டுறவுத் துறையை வளர்க்கவேண்டும். உறுப்பினர்கள் கூடியளவு பங்குகளை கொள்வனவு செய்து அதனூடாகப் பயன்பெற வேண்டும் எனக் கூறினார். (ம-11)

# சர்வதேச அஞ்சல் தினம் நேற்று யாழ். குடாநாட்டில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

மாவட்ட ரீதியிலான சர்வதேச அஞ்சல்தினம் நேற்று யாழ். அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதையர் கலந்துகொண்டார்.

நிகழ்வின் வரவேற்புரையை யாழ். அஞ்சல் திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் ஆ.சுந்தரலிங்கம் நிகழ்த்தினார்.

தொடர்ந்து, சிறப்புரைகளை ஓய்வு பெற்ற முன்னாள் அஞ்சல் அதிபர் வி.வீரசிங்கம், ஓய்வுபெற்ற அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.தர்மராசா, ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.மார்க்கண்டன், யாழ். தபாலக அதிபர் எஸ்.இராஜதுரை ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான அஞ்சல் ஊழியர்கள் கலந்துகொண்டனர். சர்வதேச அஞ்சல் தினத்தை யொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் மாகாண மட்டத்தில் பரிசில்கள் பெற்றவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ம-12)

# உள்ளூராட்சி செயலர்களுக்கு இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.10

உள்ளூராட்சிமன்ற செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்து உள்ளூராட்சி மன்ற செயலாளர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கிருஷ்ணசாமி கேட்டுள்ளார்.(ம185)

# இளையோர் உளநலம்

## ஆக்கத்துக்கு அவசியம்

**சா.சிவயோகன்**

ஒவ்வொரு வருடமும், ஒக்ரோபர் 10ஆம் திகதி உலக உளநல நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நாள்கள் பிரகடனப்படுத்தப்படுவது (உதாரணமாக, உலக சிறுவர் தினம், உலக முதியோர்தினம், ஆசிரியர்தினம்...) அடிப்படையில், அந்நாள்களையொட்டிய விடயம் தொடர்பான பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கேயாகும். அந்தவகையில், ஒவ்வோர் உலக உளநல நாளும், உளநலம் சார்ந்த பரப்புக்களில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுத்து, அந்த விடயம் பற்றிக் குவியப்படுத்தி, விழிப்புணர்வையும், சிந்தனை ஆருட்டல்களையும் ஏற்படுத்துவதை தனது இலக்குகளில் ஒன்றாகக் கொண்டிருக்கிறது. இந்தவருட உலக உளநல நாளின் தொனிப்பொருளாக, "சிறுவர்களினதும், கட்டிளமைப் பருவத்தினரதும் உள நலம்" அமைந்துள்ளது.

சிறுவர்களினதும் கட்டிளமைப் பருவத்தினரதும் உளநலம் சிறப்பாக அமையவேண்டிய தேவை மிக வெளிப்படையானது. இந்த இளையவர்கள்தான் வளர்ந்து, அனுபவ முதிர்ச்சி பெற்று, நாளைய சந்ததியினருக்கான தலைமைத்துவத்தை வழங்கி, வருங்கால உலகை உருவாக்கப் போகின்றவர்கள். ஆகவே, இவர்களது உளநலமும், குணாதிசயங்களும், சிந்தனைப்போக்கும் எதிர்காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வல்லன. மேலும், தற்பொழுது இவர்களது உளநலம் பற்றிச் சிந்திப்பதானது, உள்ளூர் நிலைமைகளோடு மிகக் கச்சிதமாகப் பொருந்துகிறது. ஒரு சமுதாயம், அழிவின் விளிம்பிற்குப் போய், ஆக்கத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கையிலே, அந்த ஆக்கத்தைப் பொறுப்பெடுத்துக் கொண்டு நடக்கவேண்டிய தேவை காலக்கடமை தற்போதைய இளையவர்களுக்கு இருப்பதனால், அவர்களது உளநலம் பற்றிச் சிந்திப்பது அவசியமாகிறது.

உண்மையிலே, இளையோர் உளநலம் என்பது, மிகப்பரந்த ஒரு பரப்பு ஆகும். அடிப்படையில் அவர்களது அறிவு, ஆளுமை, உணர்ச்சிகள், சிந்தனைகள், நடத்தைகள் போன்றவற்றில் வெவ்வேறு வயதுப் படிநிலைகளில் இருக்கக்கூடிய இயல்புகள், பிறழ்வுகள், அவற்றை அடையாளங் காணல், தலையீடுகளை மேற்கொள்ளுதல் பற்றியதாக இந்தப் பரப்பு அமைந்துள்ளது. ஆயினும், இந்தக் கட்டுரை, சமகால இளைஞரது நடத்தை சார்ந்த பிரச்சினைகளை அது உலக உளநலநாளின் தொனிப் பொருளுடன் பொருந்தி வருவதால் ஆராய விழைகின்றது.

கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக, யாழ்ப்பாண இளைஞர்கள் கெட்டுப்போவது பற்றிய முறைப்பாடுகளும், அங்கலாய்ப்புகளும், விசனங்களும் பரவலாக எழுந்தவண்ணம் உள்ளன. இவை பற்றிய அவதானக் குறிப்புக்கள், சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் பெற்றோர், ஆசிரியர், மதகுருமார், சட்டத்துறை சார்ந்தோர், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் அரசியல்துறை சார்ந்தோரிடமிருந்தும் வெளிக்கிளம்புகின்றன. பலவிதமான மேடைப்பேச்சுக்களிலும், பத்திரிகைக் குறிப்புகளிலும் இது ஒரு சூடான விடயமாக இருந்து வருகின்றது.



இந்தக் கரிசனைகளுக்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. இளைய சந்ததியினரின் பொறுப்புணர்வு, தலைமைத்துவப்பண்பு, தேசப்பற்று, ஆராயும் திறன், புதியது படைக்கும் உத்வேகம் என்பன தற்பொழுது கேள்விக்குறிகளாகியுள்ளன. மாறாக, தான் தோன்றித்தனமான, தன்னிச்சையான போக்குகளும், நடத்தைகளும் தற்பொழுது குறிப்பிடத்தக்களவில் வெளித்தெரிகின்றன. இளைஞர்கள் வன்முறைசார்ந்து சிந்திப்பதும், அதையொட்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், சமூக முரணான நடத்தைகளில் ஈடுபடுவதும், கண்களில் தூசு விழும் போது ஏற்படும் 'நமைச்சல்' போன்றதொரு நாளாந்த அனுபவமாகிறது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, சவால்கள் பலவற்றினதும் மத்தியில் இருக்கும் சமூகத்தில், அதைப் பொறுப்பேற்க வேண்டியவர்கள், அதற்குத் தயாராக இல்லையோ? என்கின்ற நியாயமான பயம் பல மட்டங்களில் உருவாகி, அவை முறைப்பாடுகளாகவும், அங்கலாய்ப்புகளாகவும், ஆதங்கங்களாகவும், அறிவுரைகளாகவும், வேண்டுகோள்களாகவும் வெளிவருகின்றன.

ஆகவே இதுபற்றிச் 'சீரியஸாக' யோசிக்கவேண்டிய ஒரு காலகட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். ஒரு விடயத்தை யோசிக்கப் புறப்படும் போது சில கேள்விகளை முன்வைத்து யோசிப்பது நல்லது என கல்வியியலாளர்கள் சொல்வார்கள். இங்கும் தவிர்க்கமுடியாதபடி சில கேள்விகள் எழுகின்றன.

எமது இளைஞர்கள் உண்மையிலேயே கெட்டுப்போனார்களா? அல்லது இது எமது அனுபவங்களில் உறைக்கின்ற ஒரு மாயத்தோற்றமா?

இது பரவலான ஒரு பிரச்சினையா அல்லது காலத்தோடு ஒட்டிய மிகைப்படுத்தப்பட்ட பிரசாரமா?

அல்லது இது தலைமுறை இடைவெளி சார்ந்த ஒரு வெளிப்பாடா?

தற்கால இளைஞர்களின் போக்கு இவ்வாறு இருப்பதற்கான காரணங்கள் எவை?

மாற்றங்கள் தேவையாயின் அதற்காக என்ன செய்யலாம்?

இன்றைய இளைய சமூகத்தினரது சிந்தனைகளும் நடத்தைகளும் திடீரென்று, வானிலிருந்து விதைத்து முளைத்தவையாகக் கொள்ள முடியாது. இது ஒரு தொடர்ச்சியான சமூக மாற்றத்தின், சமூக நியமங்கள், விழுமியங்களின் சிதைவின் வெளிப்பாடாகவே தெரிகின்றது. மிகக் கட்டுப்பாடாக, பழைமை விரும்பிகளாக இருந்த ஒரு சமூகம் ஆயுதப்போராட்டம் தொடர்பான தேவைகளை அடியொற்றியும், நடுத்தர அளவிலானதாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்ற, ஆனால் விட்டுவிட்டு உச்சத்துக்குப் போகின்ற போர்நிலைமைகளாலும், அவற்றின் நேரடியான, மறைமுகமான உளத்தாக்கங்களின் விளைவுகளாலும், மாறி மாறிப் பல தரப்புகளினால் ஆளப்பட்டு, அதிகாரம் செலுத்தப்பட்டு, மிதிக்கப்பட்டு வந்தாலும் தனது அசலான குணாதிசயத்திலிருந்து மாறிப்போனது துரதிர்ஷ்டவசமாக தற்கால இளைஞர்கள், இந்தக் கால கட்டத்தில்தான் பிறந்து, இந்த மாற்றங்களுடுதான் வளர்ந்து, தற்பொழுது மேற்பரப்பில் வெளித்தெரிய ஆரம்பித்துள்ளார்கள்.

ஒரு சில உதாரணங்களைப் பார்ப்போம். தற்கால இளைஞர்கள் பெரியவர்களை, ஆசிரியர்களை மதிக்கிறார்கள் இல்லை என்று நாங்கள் கூறுகின்றோம் (மதிப்பது என்றால் என்ன என்பதை ஆராயும் நோக்கம் இங்கில்லை). இது மூத்தவர்களை, குருவை மதித்து வாழ்ந்துவந்த ஒரு சமூகத்திற்கு அதிர்ச்சி தரக்கூடிய விடயம். இதனது மறுபக்கமாக, தற்போதைய இளைஞர் தாம் வளர்ந்து வருகின்றபோது, இந்த 'மதிப்புக்குரிய பெரியவர்கள்' எவ்வாறு தமது ஆளுமை சிதைந்து, தேவைக்கேற்ப வயதில் மிகச் சிறியவர்களையும் "அண்ணை" "சேர்" போட்டும், போரின் கொடூரத்திலே பொறுப்புணர்வு குறைந்து, அங்கலாய்த்து, சிதிலப்பட்டு நடந்து கொண்டதையும் பார்த்தபடியே வளர்ந்து வந்தவர்கள். இவர்களது அடிமனங்களில் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படுகின்ற 'பெரியவர்கள்' பற்றிய எண்ணக்கரு கேள்விக்குறியாவதில் வியப்பொன்றும் இல்லை.

வாழ்வு கேள்விக்குறியாகின்ற பொழுது, சமூகம் மாற்றத்திற்குள்ளாகும் பொழுது, காலங்காலமாக இருந்துவந்த நியமங்களும், விழுமியங்களும் சிதைந்து போகின்றன. பக்கத்து வீட்டு மாங்காய் பிடுங்கியது, பக்கத்து வீட்டு ஓடுகளையும், தளபாடங்களையும் எடுப்பதாக (களவெடுப்பதாக) மாற்றம் பெற்றது. இருபது வருடங்களுக்கு முன்பு அரசுக்கு எதிர்ப்புக்காட்ட என்று பொதுச்சொத்துக்களை அழித்ததும், எரித்ததும் மெல்லமாறி, சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் (போர்இடப்பெயர்வு) எந்தவிதமான பொதுச் சொத்துக்களிலும் கைவைப்பதாக மாறி வருகின்றது. நிலத்தில் விழுந்து கிடந்த ஐந்து சதம், பத்துச்சதம் எடுத்துக் கோவில் உண்டியலில் போட்ட காலம் மாறி, ஐந்து லட்சம், பத்து லட்சத்திற்குப் (பணவீக்கம் காரணமாக!) கணக்குக்காட்டும் காலம் வந்துவிட்டது. இது சமூகத்தின் மாற்றம். இவ்வாறான செயல்களிலே சமூகத்தின் எல்லா மட்டத்துப் பெரியவர்களும் ஈடுபடுகிறார்கள்.

இது போலத்தான் வன்முறைக் கலாசாரமும் போர்ச்சூழ்நிலையுடன் சேர்ந்து வளர்ச்சிபெற்று வந்தது. தவிர்க்கமுடியாதபடி காயங்களும், அங்கச்சிதைவுகளும், மரணங்களும் நாளாந்த அனுபவங்களாகப் போயின. இருபது வருடங்களுக்கு முன்பு ஒன்று, இரண்டு திடீர் மரணங்கள் ஒரு பிரதேசத்தையே உலுக்கியது போய், தற்பொழுது, மிகச் சாதாரணமாக 'எண்ணுக்கணக்குப்' பார்க்கும் சூழல் உருவாகிவிட்டது. இந்தச்சூழல் மாற்றத்திலே பழிவாங்கல்களும் 'கையைக் காலை முறிப்பதுவும்' ஏற்புடைமையாகத் தொடங்கியது.

சாதாரணகாலத் தொழில் வாய்ப்புகள் குறைந்து பணத்தேவை அதிகரிக்கத் தொடங்குகையில், புதிய புதிய வியாபாரங்கள் தொடங்கின. வியாபார நியமங்களும் பொறுப்புணர்வும் அருகிப்போகத் தொடங்கின. எல்லாமே 'பிஸினஸாகிப்' போனது. கோயில் திருவிழாக்கள் உட்பட அத்துடன் பொதுவாக எல்லா நிலைமைகளிலும் ஒரு நிரந்தரமின்மை இருப்பதனாலும், மாறிமாறி ஏற்பட்ட இடப்பெயர்வுகளாலும், ஊர்அடையாளம் சிதைந்துபோய் இருப்பதனாலும் (எல்லா ஊரிலும் எல்லா ஊர் ஆள்களும் இருக்கும் நிலை தோன்றியதால்) எவரும் எதையும் செய்து விட்டுப் போகலாம் என்கின்ற ஒரு நிலைமையும் உருவாகியுள்ளது. இளைஞர்களில் சினிமாவின் தாக்கம் பற்றியும், ஆபாசப்படம் பற்றியும் நாங்கள் மிக உணர்ச்சிவசப்பட்டுக் கவலைப்படும் போது, இதனை இந்த இளைஞர்களது பெற்றோரும், உற்றோருமான வளர்ந்தவர்களே ஊக்குவிக்கின்றார்கள் என்பது மறைக்கப்பட்டுப் போகின்ற உண்மையாகிறது.

இவைபோல சமூகத்தின் வளர்ந்தவர்கள், பெரியவர்கள், தாம் செய்த, செய்கின்ற பல அலுவல்களை இந்த இளஞ்சந்ததியினர் பார்த்துக்கொண்டும், அதனூடாக, இச்செயல்கள் பற்றிய மனப்பதிவுகள் கொண்டும் முகிழ்த்து வருகின்றனர். எனவே, அவர்களும் அத்திசை நோக்கி நடக்க முனைவதில் வியப்பொன்றும் இல்லை.

இன்று நாம் இது பற்றிக் கரிசனை கொள்ளத் தொடங்கியிருப்பது ஒரு நல்ல அறிகுறி. வாழ்வே போராட்டமாய், போராட்டமே வாழ்வாய் ஓடிக் கொண்டிருந்த நாம், தற்போது நின்று, நிதானித்து எம்மைப் பார்ப்பதும், எமது வருங்கால சந்ததியினரில் அக்கறை செலுத்துவதும் ஆரோக்கியமானது.

ஆயினும், 'பெரியவர்கள்' எல்லோரும் ஒரு பக்கமாக நின்று, இளைஞர்களைப் பார்த்துச் சுட்டு விரலை நீட்டிக் குறைசொல்வது சரியாகப்படவில்லை. ஒரு வகையில் இது எங்களில் இருக்கின்ற குறைபாட்டை மற்றையவர்களில் தெறித்துப் பார்க்கின்ற உளத் தற்பாதுகாப்பு முறையோ என எண்ணத் தோன்றுகிறது. இன்னொரு வகையில், இது தனிப்பட்ட எங்களில் ஏற்பட்ட தலைமுறை இடைவெளி சார்ந்த பிரச்சினையா? நாங்கள் பூங்காவனத்திருவிழா இரவிரவாய்ப் பார்த்து, ஒத்தப்பார், எதிர்ப்பாலாருடன் சேட்டை விட்டு, சிலவேளை செய்தது மறந்துபோய், (அல்லது மறக்க விரும்பி) இப்பொழுது இளைஞர்களில் குறைகாணுகிறோமா?

(மிகுதி நாளை)

# சமரைப் போன்று சமூகத்திலும் பெண்கள் மதிப்பு உயரவேண்டும்!

**தமிழீழப் பெண்கள் எழுச்சி தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.**



ஈழத் தமிழ்களது வரலாற்றில் என்றும் அழியாத பல அரிய சாதனைகள் இந்நூற்றாண்டிலேயே இடம்பெற்றுள்ளன.

இந்த வரலாற்று அத்தியாயத்தில தடம்பதித்த முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப்டினன்ட் மாலதி ஆவார்.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம 10 ஆம் திகதி கைதடிப் பகுதியில் இருந்து கோப்பாய் நோக்கி மூர்க்கமாக முன்னேறிவந்த இந்திய இராணுவத்தைத் தடுக்கும் மோதலில் தற்கொடை ஈந்தவர் லெப்டினன்ட் மாலதி.

தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கு வழிவகுத்து வித்தான மாலதியின் நினைவுநாளே தமிழீழப் பெண்களின் எழுச்சி நாளாக இன்று தமிழர் தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. இன்று உலகில் பெண்களின் சுதந்திரம், சமத்துவம் பற்றி அதிகம் பேசுகின்ற நாடுகள் அநேகம் உள்ளன. ஆனால், பெண்களின் சுதந்திரம், சமத்துவம் ஆகியவை பேணப்பட்டு, அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு சிறப்பிடம் வழங்கப்பட்டுள்ள பிரதேசமாக ஈழத்தமிழர் தாயகம் விளங்குகின்றது. இதற்கான முழுப் பெருமையும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையே சாரும். குறிப்பாக, விடுதலைப் புலிகளின் மகளிர் அணிகள் போர்க் காலத்தில் சமராடியதுடன் நின்றுவிடாது, சமூகக் களத்திலும் காலூன்றி மேற்கொண்ட நடவடிக்கைகளே ஈழத் தமிழர் தாயகத்தில் பெண்களின் நிலை மேன்மையுற வழிசமைத்தன.

**செந்துஜா**
**ஆறுகால்மடம்**

சர்வதேச ரீதியிலும் மார்ச் 8 ஆம திகதி மகளிர்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனால், அது வெறும் சம்பிரதாய நிகழ்வாகவே நடைபெறுவது வழக்கமாகிவிட்டது. ஆனால், தமிழீழ மகளிர் எழுச்சி தினம், சாதனை படைத்த பெண்களால் முன்னெடுக்கப்படுகிறது. அதனால், உணர்வுபூர்வமாக எழுச்சியுடன் இடம்பெறுவது இத்தினத்தின் சிறப்பாகும். பெண்களுக்கு அடுக்களையே தஞ்சமென வாழ வைத்த எமது சமூகக் கட்டமைப்பில் அகப்பை மட்டுமல்ல ஆட்லறிகளையும் பிடித்தியக்குவோம் என்று நிமிர்ந்துநின்ற பெண்களை நினைவுகூர மட்டுமல்லாது, அவர்களது இலட்சியங்களை முன்னெடுக்க நம்மை அர்ப்பணிக்கும் நாளாகவும் தமிழீழ மகளிர் எழுச்சிதினம் விளங்குகிறது.

இன்றைய நாளில் பெண்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு மட்டுமன்றி, போராட்ட ரீதியில் பெற்ற மதிப்பையும் சிறப்பையும் அவர்கள் சமூக மட்டத்தில் மேலும் பெறுவதற்கு அனைவரும் உழைப்போம் என்று இந்த எழுச்சிமிகு நாளில் உறுதியெடுத்துக்கொள்வோம். ★

# சுழற்சி முறைக்கடன் வழங்குவதற்கு 37லட்சத்து 50ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

## 6 ப.நோ.கூ. சங்கங்களுக்குக் கிடைக்கும்

அரியாலை,ஒக்.10

சுழற்சி முறைக்கடன் திட்டத்தின் கீழ் வழங்கவென 6 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 37 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களின் பொருளாதார வளத்தை உயர்த்தும் முகமாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஐநா. அபிவிருத்தித் திட்டத்தால் சுழற்சி முறைக்கடன் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முன்றாம் கட்டமாக மேலும் ஆறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 37 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம், மருதங்கேணி, பருத்தித்துறை, புலோலி ஆகிய ஆறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு சுயமுயற்சிக் கடனாக வழங்கும் பொருட்டே இத்தொகை வழங்கப்படவுள்ளது."

கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் இந்த சுழற்சிமுறைக் கடன் திட்டத்தில் இரண்டு கட்டங்களாக குடாநாட்டில் உள்ள 17 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஏற்கனவே 931 பயனாளிகளுக்கு ஒருகோடி 54 லட்சம் ரூபா சுழற்சி முறைக் கடனாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)


**சிறந்த இரு வாகனங்கள்**
# விற்பனைக்குண்டு

BRAND NEW சிவப்புநிற நிஷான் வர்க்க இரு கெப் வாகனமும் (டீசல்), 504 பேர்ஜோ வர்க்க சிவப்பு நிற டீசல் காரும் விற்பனைக்குண்டு.

இரு வாகனங்களும் சிறந்த முறையில் செலுத்தியதோடு, வந்து பார்வையிட்டு பரிசோதித்து பார்க்கவும் முடியும்.

தொடர்பு:- **V.நாகரத்தினம்,**
**சக்தி உணவகம் அருகில்**
***கே.கே.எஸ். வீதி,***
***சுன்னாகம்.***

(24-11-15) (23481)


# கண்ணீர் அஞ்சலி

**கலாரத்னா, கலாபூஷணம், முத்தமிழ்க் கலாநிதி, முத்தமிழ்ச் சுரபி,**
**மஹாவித்துவான் - யாழ்ப்பாணம்**
**பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் (M.A.)**



(அகில இலங்கை சமாதான நீதிவான்,
முன்னாள் விரிவுரையாளர்,
அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்
பலாலி, அதிதி விரிவுரையாளர்,
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**அன்னார் இயற்கை எய்திய செய்தியைக் கேட்டு ஆழ்ந்த வருத்தமும் அதிர்ச்சியும் அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், கலையுலகத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், அவரின் ஆத்மா சாந்தியடைவதற்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

புளியங்கூடல் - செருத்தனைப்பதி
ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்,
ஊர்காவற்றுறை.

(23479) (25-24-11-15)

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இலங்கை அரசு வடக்கு - கிழக்கு மாகாணம்
### வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
### கடன் இல.: 2880 - சி.இ.(C.E.)
## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
### நிர்மாண வேலைகள்
## கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.(I.F.B.)

ஐ.எப்.பி.இல.: கிளி/நீர்ப்/03 திகதி: 10.10.2003

08. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D.) கடன் வசதி, ஐ.டி.ஏ. (I.D.A.) நம்பிக்கையின் கீழான வசதி.
09. *அரசாங்க அதிபர், கிளிநொச்சி, இலங்கை* அவர்களால், மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.
10. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான, *அரசாங்க அதிபர், கிளிநொச்சி* என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (**Draft**) சமர்ப்பிப்பதன் பேரில் *பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி* அவர்களிடமிருந்து 11.11.2003 ஆம் *திகதி* பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
11. ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை *பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில்* இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**பிரதம எந்திரி,**
**மாகாண கட்டடங்கள் திணைக்களம்,**
**பழையகமம், முரசுமோட்டை, பரந்தன், கிளிநொச்சி.**

12. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் *அரசாங்க அதிபர், கிளிநொச்சி* என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, பின்வரும் முகவரிக்கு 11.11.2003 பிற்பகல் 3.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**தலைவர், கேள்விச் சபை,**
**மாவட்ட செயலகம், கச்சேரி, கிளிநொச்சி.**

அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில், காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின், அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

13. வேறு விவரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல. | வேலை விவரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கிளி/நீர்ப்/சுவே/9 | பழைய வைத்தியசாலையை சுற்றி மதில் மீள்நிர்மாணம். கிளிநொச்சி | 34.700/- | 500/- | 02 Months |
| கிளி/நீர்ப்/சுவே/10 | பழைய வைத்தியசாலைக்கு மின் பிறப்பாக்கியறை மீள்நிர்மாணம். கிளிநொச்சி | 8.300/- | 250/- | 01 Month |
| கிளி/நீர்ப்/சுவே/11 | பழைய வைத்தியசாலைக்கு சமையலறை மீள்நிர்மாணம கிளிநொச்சி. | 8.500/- | 250/- | 01 Month |

14. கேள்விதாரர்கள் கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புக்கள் 04 பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளாக கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்த கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும், இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்துக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

(C/30590) (26-24-15-19)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்







## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2059937 இருந்து
2078951 வரை
சீட்டிழுப்பு இல. 1442
திகதி 08.10.2003

## வெற்றி எண்கள்
**15 17 23 31 36**

போனஸ் எண் **56**

## ஜக்பொட் பரிசு
**ரூபா.2,414,350/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,414,350/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 109 | 10,000/- | 1,090,000/- |
| 3 | 5,994 | 500/- | 2,997,000/- |
| 2 | 98,595 | 20/- | 1,971,900/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 1ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 121,048 | 10/- | 1,210,480/- |

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் **ரூபா.3,349,750/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,569,380/-

தொடர் இல. 3037697க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 11ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2081330-2-81
2085127-6-86
2078814-3-50
2078155-0-37
2077098-8-72

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# எமது பெண்கள் முற்போக்கு கொள்கைகளை வாழ்வின் இலட்சியமாகக் கொள்ளவேண்டும்!

## அரசியல் துறை மகளிர் பிரிவின் எழுச்சிதினச் செய்தி

யாழ்ப்பாணம்,ஒக்.10

தமிழீழப் பெண்கள் முற்போக்குக் கொள்கைகளை வாழ்வின் இலட்சியமாக வரித்துக்கொள்ள வேண்டும்.

2ஆம் லெப்டினன்ட் மாலதி நினைவுநாள் மற்றும் தமிழீழ மகளிர் எழுச்சி நாள் ஆகியவற்றையொட்டி தமிழீழ அரசியல்துறையின் மகளிர் பிரிவு வெளியிட்ட செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது:-

இன்று தமிழீழப் பெண்களின் எழுச்சிநாள். தமிழ் சமூகத்தின் வரலாற்றில் முதல்முதலாக ஒரு பெண், புரட்சிக்கு வித்தான புனிதநாள். இந்த நாளானது தமிழமக்கள் அனைவரும் அந்த வீரமகளின் இலட்சியத்தை தமக்குள் மீண்டும் பட்டை தீட்டிக்கொள்ளவும் இளைய தலைமுறையினரிடம் பதியமிட்டு வளர்க்கவும் பொருத்தமான எழுச்சிநாள்.

நீண்டகால அடிமை வாழ்வில் சிக்குண்டு போயிருந்த எமது சமூகத்திடம் வாழ்வியலின் யதார்த்த நெறிமுறைகள் சிதைந்து போயின. வெறுமனே இதுதான் வழமை என்று சொலப்படுகின்ற வழக்காறுகளும், சம்பிரதாயங்களும், சடங்குகளும், மூடநம்பிக்கைகளும், போலித்தன்மைகளும் மலிந்துபோய் உண்மைக்கான தேடல் அற்றுப்போனது.

இவ்வாறு வலுவிழந்து வழிதடுமாறி நின்ற தமிழ்ச் சமூகத்தின் இயங்கு நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முகிழ்ப்பானது புதிய அதிர்வுகளை ஏற்படுத்தியது. புது இரத்தம் பாய்ச்சியது. புதிய திசையில் வழி நடத்தியது. விடுதலை என்ற சொல்லையும் அதன் வீரியத்தையும் தமிழ் மக்களின் மனங்களில் ஆழப்பதித்தது.

### விடுதலை

உண்மையில் விடுதலை என்பது என்ன? அந்நிய ஆக்கிரமிப்பில் இருந்து நிலத்தை மட்டும் மீட்டெடுப்பதா? இல்லை அனைத்துவிதமான அடிமைத்தனங்களிலிருந்தும் சாதிமத வேறுபாடுகளிலிருந்தும், பெண்ணொடுக்கு முறைத்தனங்களிலிருந்தும், சமூக ஏற்றத்தாழ்வுகளிலிருந்தும் இனத்தை மீட்டெடுத்து சகல நிறைவோடும் நாட்டைக் கட்டியெழுப்புதல் என்று விடுதலையின் அர்த்தம் ஆழமானது. அந்த அர்த்த பரிமாணத்தில் பார்க்கும்போது எமது விடுதலைப் போராட்டமானது ஆழமும், விரிவும் கொண்டதான மானுடத்தின் புரட்சியாக இன்று பூமிப் பந்தில் பரிணமித்துள்ளது.

சமூகத்தில் இணைபிரியாத அங்கமான பெண்களைப் புறக்கணித்துவிட்டு முன்னெடுக்கப்படும் எந்தப் போராட்டமும் தேசிய முழுமையைப் பெறமுடியாது என்ற எமது தேசியத்தலைவரின் ஆழ்ந்த நோக்கானது, தமிழீழப் பெண்களின் புரட்சிக்கு வழிசமைத்தது. இதுதான், இப்படித்தான் என்ற சமூக வார்ப்பிலிருந்த பெண்ணின் இயல்பை சுயத்தின் தேடலாக ஆளுமையின் மீதான காதலாக முன்நகர்த்தியது. பெண்மைபற்றிய சமூகத்தின் பார்வையும் புரிதலும் மாற்றம்பெற வேண்டுமாயின் அது எங்கே ஆரம்பிக்கப்படவேண்டும்? என்ற கேள்விக்கு நாளாந்த வாழ்வின் நடைமுறைகளிலிருந்தும் தேவைகளிலிருந்தும் சரியான வாழ்வின் மீதான விருப்பிலிருந்தும், வாழ்வதற்கான பிரச்சினைகளிலிருந்தும்தான் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற பதிலையே வரலாறு எமக்கு உணர்த்தியது. இலகுவில் புரிபடாத தத்துவங்களை ஆய்வு செய்து பதில்களைத் தேடுவதற்கான அவகாசங்களோ, சாத்தியப்பாடுகளோ உண்மையில் எந்தத் தமிழ்ப் பெண்ணுக்கும் இருக்கவில்லை. உயிர் வாழ்வதற்கான சாத்தியப்பாடுகளே தென்படாத பொழுது வரைவிலக்கணங்களை மட்டுமே வைத்துக்கொண்டு வெறும் கனவு காண்பது இருப்பையே தொலைத்துவிடும் நிலைக்கு இட்டுச் செல்லவும் கூடும். எனவேதான் வாழ்வின் நடைமுறைகளின் மூலமாகவே மாற்றத்திற்கான புதிய வாசல்களைத் திறக்கவும், பொருத்தமான புதிய தத்துவங்களை உருவாக்கவும் முடியும் என பதை எமது போராட்ட வரலாறு கற்றுத் தந்தது.

### ஆளுமையும் அவலமும்

விடுதலைப் போராட்டத்தின் சமூக விடுதலை பற்றிய ஆழ்ந்த நோக்கிற்கும் அப்பால் இன்னும் பெண்மை பற்றிய பல புரிந்து கொள்ளாமைகளும், அவநம்பிக்கைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளே சமூகத்தில் சீர்செய்யப்படாத சிக்கல்களாகவும் மலிந்து போய்க்கிடக்கின்றன. இங்கே தான் இன்னுமொரு கேள்வி எழுகின்றது. ஒரேதேசத்தில் ஒரு பெண் ஆளுமையின் உச்சத்தை எட்டவும் அதேவேளை, இன்னொரு பெண் அவலத்தில் உழலவும் எப்படிச் சாத்தியமாகிறது? உண்மையில் இதுதான் தேசம் முழுமையாக மீட்கப்படாத இன்றை சூழ்நிலையில் சாத்தியப்படுகின்ற நிலைமையாகவும் இருக்கின்றது.

ஏனெனில், அடிப்படையில் மாற்றம் நிகழவேண்டியது மனவுலகில் என்ற வகையில் எம்மினத்தின் நிலத்தை மட்டுமல்ல மனத்தையும் ஆக்கிரமிக்கவும் ஆட்டிப்படைக்கவும் எத்தனையோ விடயங்கள் எதிரியால் திட்டமிட்டே கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. மனித வாழ்வுக்கு எதெது தேவையோ அவைகள் தடைசெய்யப்பட்ட போதிலும், மனிதவாழ்வை எவையெவை சீரழிப்பவையோ அவைகள் தாராளமாகவே வழங்கப்பட்டன. இளைய தலைமுறையினரின் சிந்தனையில் அடிமைசுகத்தை வழங்கி, புரட்சியின் சுகத்தை புறந்தள்ளுவதே இதன் உள்நோக்கமாகியிருந்தது. இது ஓரளவேனும் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எதிரிக்கு சாத்தியமாகவும் இருந்தது. இன்னொரு புறத்தில் பார்க்கும் பொழுது மாற்றத்திற்கான முக்கிய களமாக விளங்குவது கல்விச்சாலைகள். எமக்கான கல்வியை நாமே தீர்மானிக்காதவரைக்கும் தென்னிலங்கையின் பரீட்சைத்தாள்களுக்கு எமது இளைய தலைமுறையை தயார்ப்படுத்தும் களமாக மட்டுமே எமது பள்ளிகள் இருக்க முடியும்.

தேசத்தை நேசிக்கவும், தேசத்தின் வளங்களை ஆய்வு செய்யவும், அதனை வளர்த்தெடுக்கவும், எல்லாவற்றுக்கும் மேலாக சமூகத்தின் பிற்போக்குத் தளைகளை அண்டவிடாத புரட்சிக்கூடங்களாக புதியமனோபாவத்தோடு இளைய தலைமுறையை தேசத்தின் சிற்பிகளாக உருவாக்கும் இடமாக, எமது பள்ளிகள் மாறினால் சமூகத்தின் மனவுலகு நிச்சயம் மாறும்.

தாயகத்திற்கு வெளியே புலம்பெயர்ந்து வாழும் பெண்களின் பிரச்சினைகள் இன்னும் வித்தியாசமானவை. வழக்கமான தமிழ்ச் சமூகத்தின் மனோபாவத்திற்கும் அந்நிய நாட்டு சமூகத்தின் நடைமுறைகளுக்குமிடையே சிக்கித்தவிக்கும் பெண்கள் அவர்கள். இருப்பினும், அவர்களின் தேசத்தின் மீதான நேசிப்பு, தேச விடுதலைக்கான உழைப்பு உன்னதமானது. அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வும் தேச விடுதலையின் வேரிலேயே தங்கியுள்ளது.

வரலாற்றின் முதல்வரியை எழுதிச் சென்ற இரண்டாம் லெப்ரினன்ட் மாலதியின் இந்த மகத்துவம் வாய்ந்த நாளில் மிகுந்த தன்னம்பிக்கையோடும் கம்பீரத்தோடும் தேசியத் தலைவரின் தலைமையின் கீழ் தமிழீழத் தேசத்தின் பெண்கள் ஒரு முக்கியமான செய்தியை உலகிற்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றார்கள். "முன்னொருகாலம் அடங்கிக் கிடந்த பெண்ணினம் தமிழீழத்தின் புதிய வரலாற்றில் போர்க்களங்களில் பகைவரைச் சுட்டெரித்த வீராவேசத்தோடும் தெளிந்த ஞானத்தோடும் சமூகத்தின் தளைகளையும் சுட்டெரிக்கத் தயாராகிவிட்டனர். புரட்சிப் பெண்கள் யுத்த களங்களில் மட்டுமல்ல சமூகத்தின் எல்லாத் தளங்களிலுமேயே வாழ்கிறார்கள்; வளர்கிறார்கள். இன்னுமின்னும் எந்தத் தீக்குளிப்பிற்கும் அவர்கள் தயாராகவே இருக்கின்றார்கள். எனவே, தேசத்தின் விடுதலையில் இணைந்து நிற்கும் தமிழீழப் பெண்களாகிய நாம் சமூக விடுதலையிலும் இணைந்து முற்போக்கான கொள்கைகளை வாழ்வின் இலட்சியங்களாக வரித்துக்கொள்வோம் என இந்நாளில் உறுதியெடுத்துக் கொள்கின்றோம்".

எம்மோடு இணைந்து பணியாற்றும் அனைத்து பெண்கள் அமைப்பினருக்கும் இந்நாளில் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் தேசியத் தலைவர் அவர்களின் வழிகாட்டலில் என்றும் தமிழீழப் பெண்களுக்கு பக்கபலமாக நின்று அவர்களின் எழுச்சிக்கு வலுச் சேர்த்து அனைவரும் இணைந்து தேசவிடுதலைக்காய் உழைப்போம் என கூறிக்கொள்வதில் அரசியல் துறை மகளிர் பிரிவு பெருமையும் பேருவகையும் அடைகின்றது - என்றுள்ளது.

(ஞ)

# மடத்தடி மக்கள் எதிர்ப்பின் பின்னணியில்..........

கடந்த 3 ஆம் திகதி அதிகாலை வழமைபோலவே விடிந்தது. எல்லோரும் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதில் மூழ்கிப்போயிருந்தனர். என்றும் போல் அன்றும் சாதாரணமாகக் கழியும் என்பதுதான் அனைவரதும் எதிர்பார்ப்பு. ஆனாலும் இறைவன் சித்தம் அதுவல்லப்போலும்.

மாலையில் யாழ். மடத்தடியில் நடந்த விபத்து அந்த நாளின் போக்கையே மாற்றியது. பொழுது சாயும் வேளை நடந்த அந்தச் சம்பவத்தால் மறுநாள் கருக்கலும் கலகலத்துப் போனது.

மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இருவரை இராணுவ ட்ரக் ஒன்று மோதிப் பந்தாடியதுதான் அன்றைய சோகம். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் அதே இடத்தில் பலியானார்கள்.

ட்ரக் மோதிய வேகத்தில் மோட்டார் சைக்கிள் சுமார் 20 மீற்றர் தூரத்திற்கு நிலத்தில் தரதரவென இழுத்துச் செல்லப்பட்டது. அதிலிருந்த இருவரும் ட்ரக் மற்றும் மோட்டார் சைக்கிளின் இடையே அகப்பட்டு தரையில் இழுபட்டனர். அவர்களில் ஒருவர் அணிந்திருந்த ஹெல்மெட் உடைந்து சிதறியது. ஹெல்மெட்டே சிதறினால் தலை என்ன பாடுபட்டிருக்கும். முகம், தலை, கழுத்து என அனைத்தும் உடைந்து சிதைந்துபோக ஒரு சில நிமிடங்களில் அவர்கள் உருமாறிப் போனார்கள். உடல் எங்கும் கிழிசல்கள், உரசல்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தன அவர்களது உடல்கள்.

அவர்கள் வந்த மோட்டார் சைக்கிள் அதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லாத இரும்புக்குவியல் போல கிடந்தது. இருக்கைகள் கிழிந்து துாளாய்ப் பறக்க, 'றிம்'கள் உடைந்து நெளிய உருக்குலைந்துபோன அதுவே விபத்தின் மொத்த சாட்சி. அதைக் கண்டவர்கள் என்ன நடந்தது என்று சொல்ல முடியாதளவிற்கு அதிர்ச்சியடைந்துபோய் நின்றனர். கண்மூடித் திறப்பதற்குள் எல்லாமே நடந்து முடிந்திருந்தன.

இந்தக் கோர விபத்தும் அதனால் ஏற்படுத்திய பாதிப்பும் அதனைப் பார்த்தவர்களைக் கொந்தளிக்க வைத்தது. குமுறிய மனங்களில் ஆத்திரம் கிளம்பியது. அதற்குத் தூபம் போட்டன தொடர்ந்து நடந்த சம்பவங்கள்.

உயிரிழந்தவர்களின் சடலங்களை இராணுவத்தினர் உடனடியாக அங்கிருந்து அகற்றி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர். சிறிது நேரத்தில் அங்குவந்த பொலீஸார் விபத்தை ஏற்படுத்திய ட்ரக்கையும் அங்கிருந்து அகற்ற முயன்றனர்.

ஏற்கனவே விபத்தைப் பார்த்து அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்திருந்த மக்களுக்கு பொலீஸாரின் இச்செயல் மேலும் ஆத்திரத்தைக் கிளப்பியது. விபத்து நடந்த இடத்திலிருந்து ட்ரக்கை அப்புறப்படுத்தக் கூடாது என மக்கள் குரல் எழுப்பினர்.

நீதிவான் வந்து பார்வையிடாமல் ட்ரக்கை அகற்றுவது அந்தவகையில் நியாயமானதென சாதாரண மக்கள், சட்டம் ஒழுங்கைப் பேணும் பொலீஸாரிடம் கேள்வியெழுப்பினார்கள். வாகனத்தின் பாதுகாப்புக் கருதி அதனை அகற்றுவதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். "விபத்தில் பறிக்கப்பட்ட இரு உயிர்களைவிட உங்களது வாகனம் தான் உங்களுக்கு முக்கியமா? என மறு கேள்வியெழுப்பிய பொதுமக்கள் உங்களது வாகனத்திற்கு 'பிரேக்' இல்லை. அதனால்தான் விபத்து ஏற்பட்டது. 'பிரேக்' இருந்தால் எமக்கு முன்னால் வைத்து அதை நிரூபியுங்கள் எனவும் கேட்டனர்.

வாகனத்தை ஓட்டிவந்த இராணுவ சாரதி விபத்து நடைபெற்ற அந்தக் கணத்தில் வாகனத்தின் 'பிரேக்'கை எழுந்து நின்று மிதித்ததாகவும் எனினும் வாகனம் எதற்கும் கட்டுப்படாமல் மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளியதாகவும் விபத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்தார். மக்களின் கேள்விக்கும் கொந்தளிப்புக்கும் அதுவே காரணம்.

பொதுமக்களின் எதிர்ப்பை பொலீஸார் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்களை மீறி வாகனத்தைப் பொலீஸார் அகற்றியபோதுதான் மோதல் வெடித்தது. ஆத்திரமடைந்த பொதுமக்கள், படையினர் மற்றும் பொலீஸார் மீது கல்லெறிய ஆரம்பித்தார்கள். இதன் எதிரொலி அடுத்த நாள் காலையிலும் கேட்டது.

யாழ். பிரதான வீதியில் - விபத்து நடைபெற்ற இடத்தில் மறுநாள் காலை ஒன்றுகூடிய பொதுமக்கள் படையினருக்கும் பொலீஸாருக்கும்

**ராஜராஜன், தீபன்.**

எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்; மறியல் செய்தனர்.

அப்பகுதியில் மக்களின் போக்குவரத்துக்குத் தடையாக உள்ள இராணுவ முகாமை உடனடியாக அகற்றுமாறும் பொதுமக்கள் கோரினர். இதற்குப் படையினரும், பொலீஸாரும் மறுப்புத் தெரிவிக்கவே ஆத்திரமடைந்த பொதுமக்கள் தமது கடுமையான எதிர்ப்பின் உச்சக்கட்டமாக பொலீஸார் மற்றும் இராணுவத்தினருடன் தாக்குதலில் ஈடுபட்டனர். போத்தல்கள், கற்கள், கொட்டன்கள் கொண்டு மக்கள் பொலீஸாரைத் தாக்கினார்கள். ஓட்டோக்களில் கேஸ்கேஸாக பியர் போத்தல்கள் வந்திறங்கின. பதிலுக்கு பொலீஸார் மற்றும் இராணுவத்தினரும் மக்களைக் கலைத்துக் கலைத்துத் தாக்கினார்கள்.

இராணுவம் - பொலீஸாரைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு எதிராக திடீரென பொதுமக்கள் கிளர்ந்தெழுந்து தாக்குதல் நடத்திய மிகப் பெரிய சம்பவம் இது. யாழ். குடாநாட்டுப் பொதுமக்கள் தம்மைத் தாக்கக் கூடிய துணிவுடன் உள்ளார்கள் என்பதை பொலீஸாருக்கும், இராணுவத்தினருக்கும் வெளிப்படுத்திய சம்பவமும் இதுதான். பொதுமக்களின் தாக்குதலை எதிர்கொள்வதற்கு பொலீஸாரும் இராணுவத்தினரும் கடுமையாகச் செயற்பட்டனர். இதனால் அவர்கள் பொதுமக்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் வீசியதுடன் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர். கற்கள், தடிகள் கொண்டும் பொது மக்களைக் கண்மூடித்தனமாகவும் தாக்கினார்கள். பொதுமக்கள் மீதான இத்தாக்குதல் ஒரு திட்டமிட்ட தாக்குதல் என்றுதான் பலரும் கருதுகின்றனர்.

யாழ். குடாநாட்டில் இதுவரை பல வீதிவிபத்துக்களில் பலர் உயிரிழந்துள்ளனர். குறிப்பாக இராணுவ வாகனங்கள் மோதிக்கூட பலர் உயிரிழந்துள்ளனர். இவ்விபத்துச் சம்பவங்களுக்கெல்லாம் மக்களிடையே இருந்து எதிர்ப்புகள் கிளம்பியிருந்தாலும் மடத்தடிச் சம்பவத்தில் எழுந்த எதிர்ப்பலைகளைப்போல அவை இருக்கவில்லை.

யாழ். மடத்தடியில் இப்படியானதொரு மக்கள் பெரிய எதிர்ப்புக் காட்டப்பட்டதற்கு பின்னணிக் காரணம் ஒன்றும் இருக்கத்தான் செய்கிறது. அதற்குப் பின்னணியில் முக்கிய காரணங்கள் சில உள்ளன என்பது உண்மை.

"உந்தச் சென்றி உதில இருக்கிறதால இந்த றோட்டுகளில் சரியான போக்குவரத்து நெரிசல் ஏற்படுது. எந்தப் பக்கத்தால என்ன வாகனம் வருகுதெண்டே தெரியேல. அதாலதான் நிறைய விபத்துகள் உந்தச் சந்தியில நடக்குது. பள்ளிக்கூடம் தொடங்கி முடியிற நேரங்களில உதால போற பள்ளிக்கூடப் பிள்ளையள் படுகிற பாட்ட நான் நல்லா அவதானிச்சிருக்கிறன். உந்த சென்றியை உதில வச்சிருக்கிறதால உவங்களுக்கு என்ன நன்மையோ? எனக்கு ஒண்டுமா விளங்கேல" என்றார் அப்பகுதியில் உள்ள ஒரு முதியவர்.

இச்சம்பவம் தொடர்பாக எமது செய்தியாளர் அப்பகுதியில் சென்று விசாரித்தபோது முதியவர் தெரிவித்த முதலாவது பிரதான கருத்து இது.

அது உண்மைதான் என்று எண்ணத் தோன்றுகின்ற அளவுக்கு அந்த இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. யாழ். பிரதான வீதியில் - யாழ். கன்னியர்மடத்துக்கு அருகில் வருகின்ற வீதியும் - மவுண்காமல் வீதியும் வந்து சந்திக்கும் இடத்தில் வீதியின் பெரிய இடப்பரப்பில் இந்த இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வீதிகள் அனைத்தும் அதிக சன நடமாட்டத்தைக் கொண்ட வீதிகள். வீதியால் வரும்போது அடுத்த வீதியில் என்ன வாகனம் வருகின்றது என்பதை இனங்காண்பதற்கு இந்த இராணுவ முகாம் தடையாக உள்ளது. இதனால் அப்பகுதியில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக அப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக காலையில் பாடசாலைக்குச் செல்லும் போதும், பாடசாலை முடிந்த வீடுதிரும்பும் போது இப்பகுதியில் நெரிசல் ஏற்படுவதால் மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்; அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகின்றன. அத்துடன், இதில் வாகனங்களில் வருகின்றபோது

(11ஆம் பக்கம் பார்க்க)